
மாலை தீப்பொறி

MALAE THEEPORI



2023 செப்டம்பர் 1-15 தொகுதி 22 இதழ் 3 விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# ‘இந்தியா’ வெல்லும்

## இந்தியா கூட்டணியின் 3வது கூட்டம்

### 31 ஆகஸ்ட் - 1 செப். 2023 - மும்பை






## புரட்சிகர இளைஞர் கழகம் – அகில இந்திய மாணவர் கழகம்

# தமிழ்நாட்டு சட்டமன்றம் நோக்கி மாணவர்–இளைஞர் பெருந்திரள் பேரணி – ஆர்ப்பாட்டம்



- புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிடுக!
- மாணவர்கள் நலன் சார்ந்த, சனாதன கொள்கைக்கு எதிரான, பகுத்தறிவு சிந்தனைகள் உள்ளடக்கிய தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கையை விரைவில் அமல்படுத்திடு!!
- கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும்!
- சுயநிதி கல்வி நிறுவனங்களின் கட்டணக் கொள்ளை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்!
- தமிழகத்தில் காலியாக உள்ள காலி பணியிடங்களை உடனடியாக நிரப்பிடுக!!!
- தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் 90% தமிழகத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கிடுக!!!

*உள்ளிட்ட மாணவர்– இளைஞர் கோரிக்கைகளை வலியுறுத்தி 30.8.2023 அன்று சென்னை எழும்பூரில் புரட்சிகர இளைஞர் கழகம் மற்றும் அகில இந்திய மாணவர் கழகத்தின் சார்பாக மாணவர் இளைஞர் பேரணி நடைபெற்றது. பேரணியை புரட்சிகர இளைஞர் கழக மாநில தலைவர் தோழர் சுந்தர்ராஜ், மாநில பொதுச் செயலாளர் தோழர் தனவேல், அகில இந்திய மாணவர் கழக மாநில பொறுப்பாளர் தோழர் ஜி. சுந்தர்ராஜன் தலைமை ஏற்று நடத்தினார்கள். பேரணியை சிபிஐ(எம்எல்) கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர் துவக்கி வைத்து உரையாற்றினார். பேரணியை வாழ்த்தி பேராசிரியர் சிவகுமார் பேசினார். பேரணியின் நிறைவில் சிபிஐ(எம்எல்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, மாநில குழு உறுப்பினரும் சென்னை மாவட்டச் செயலாளருமான தோழர் சொ.இரணியப்பன் வாழ்த்தி பேசினார்கள்.*

*மேலும் புரட்சிகர இளைஞர் கழக, அகில இந்திய மாணவர் கழக மாநில நிர்வாகிகள், அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர் சங்க மத்தியக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் அதியமான் ஆகியோர் தலைமைச் செயலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு கல்வித்துறை முதன்மைச் செயலாளர், முதலமைச்சரின் தனிச்செயலாளர், உயர் கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.* ❑

2023 செப் 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 3

## உள்ளே


| | |
|---|---|
| அரசமைப்புச் சட்டத்தை தகர்க்கும் சதி | 4 |
| நிலவில் இந்தியாவும் இந்தியாவில் வகுப்பறையும் | 6 |
| பழைய ஓய்வூதியத் திட்டம் வேண்டும் | 9 |
| தோழர் சசியாதவ் பேட்டி | 11 |
| நான்குநேரி கொடூரம் தொடரக் கூடாது | 15 |
| புதிய மொந்தையில் பழைய விஷக் கள் | 17 |
| தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம் | 20 |


**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரண்டியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

**தலையங்கம்**

# பதட்டமான பாஜக: 'இந்தியா'வை எதிர்கொள்ள வேகமெடுக்கும் காவிப் பாசிசச் சதிகள்

*எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மும்பையில் நடந்து முடிந்துள்ளது. பாஜகவை எதிர்கொள்ள 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் 28 எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு மாநிலங்களில் தொகுதிப் பங்கீடு ஏற்பாடுகள் உடனடியாகத் தொடங்கப்பட்டு ஒத்துழைப்போடு கூடிய விரைவில் முடிக்கவும் மக்கள் நலன் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பாக கூட்டணியின் சார்பாக பொதுக் கூட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளது. இதற்கு முன்பாகவே இகக(மாலெ)யின் சார்பாக 'இந்தியா' கூட்டணியின் கூட்டம் வரும் செப்.15 அன்று அண்ணா பிறந்த நாளில் நாகர்கோயிலில் நடத்த முடிவு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது. நாடெங்கிலும் 'இந்தியா' கூட்டணிக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகிவரும் இந்த சூழ்நிலையில், ஆர்எஸ்எஸ்–பாஜக எப்படியாவது மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்பதற்காக, மோடி தன்னுடைய அதிபர் கனவை நிறைவேற்றிட வேண்டும் என்பதற்காக இந்திய அரசமைப்புக்கு முரணாக, ஜனநாயகத்திற்கு விரோதமாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளில், நீதிநெறிமுறையிலுள்ள முப்பெரும் சட்டங்களை மாற்றிட, பெயரைக்கூட சமஸ்கிருதத்தில் மாற்றி மூன்று புதிய சட்ட மசோதாக்களை தாக்கல் செய்துள்ளது ஒன்றிய அரசு. அவை சட்டமாக்கப்பட்டால், ஆர்எஸ்எஸ்–சங்கிகள் தவிர வேறு எவரும் எதுவும் பேச, எழுத, கருத்துகூற முடியாது. ஏற்கனவே தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்க, உச்சநீதிமன்ற நீதிபதியின் பரிந்துரை தேவையில்லை என ஒரு சட்ட மசோதாவைத் தாக்கல் செய்தது. இப்போது, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழுவை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. மரபுகளை யெல்லாம் மீறி இந்தியாவின் முதல் குடிமகனாக பதவி வகித்த ஒரு குடியரசுத் தலைவரை, ஒரு குழுவிற்குத் தலைவராக மோடி அரசு நியமித்துள்ளது. திரு.ராம்நாத் கோவிந்த் குடியரசுத் தலைவராக இருந்தபோது, அவர் 'தலித்' என்ற காரணத்திற்காக, ஒரு இந்து கோவிலுக்குள்ளேயே அவரை விட மறுத்து அவர் பாதம் பட்ட இடத்தை கழுவி விட்டார்கள். இப்போது நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்தவரை ஒரு குழுவிற்குத் தலைவராக்கி அவமதிக்கிறார்கள். வரும் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை 5 நாட்களுக்கு நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை நடத்தப் போகிறார்கள். அதில் 'ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா தாக்கல் செய்யப்படலாம். பெரும்பாலான மாநிலங்களில் பாஜக கூட்டணி அல்லாத கட்சிகள்தான் ஆட்சியில் இருக்கின்றன. ஆதலால், ஒரே நாடு, ஒரே தேர்தல் என்று கொண்டுவந்துவிட்டால், வாக்கு எந்திரம், மோசடிகள் மூலம் மத்தியிலும் மாநிலங்களிலும் தானே ஆட்சியில் அமர்ந்து விடலாம் என்று திட்டம் போடுகிறது பாஜக. தமிழ்நாட்டில் பாஜகவின் அடிமை அதிமுகவும் இதற்கு ஆதரவு அளிக்கிறது. நாட்டின் வளங்களையும் பொதுத்துறை நிறுவனங் களையும் அதானி, அம்பானிக்குத் தாரைவார்த்துவிட்ட பாஜகவின் ஊழல் கதைகள் எல்லாம் ஹிண்டன்பர்க் மற்றும் மத்திய தணிக்கை கணக்காளர் வாயிலாக அம்பலப்பட்டுப் போய் நிற்கும்போது, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' மூலம் நாட்டிற்குச் செலவைக் குறைக்கப் போகிறோம் என்கிறார்கள். பாசிச பாஜகவின் பதட்டம், அதை புதுப் புது சதி வேலைகளில் இறங்கச் செய்கிறது. பாஜகவின் சதிகளையெல்லாம் 'இந்தியா' கூட்டணி மக்கள் ஆதரவால் முறியடிக்கும். அதன் முதல் படிதான் செப்டம்பர் 15 அன்று குமரியில் இகக(மாலெ) தலைமையில் நடக்கவிருக்கும் இந்தியா கூட்டணியின் கருத்தரங்கம்.* ❑

# இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் தகர்க்கும் சதியை முறியடித்தேயாக வேண்டும்

*இந்து மேலாதிக்கவாத முகாமின் நீண்டகாலத் திட்டமான இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஒழித்துக் கட்டுவதற்கான உரத்த கூச்சல் இப்போது வெளிப்படையாக கேட்கிறது. இந்தியாவின் 76வது சுதந்திர தினத்தையொட்டி, ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்திற்கான வாதம் மிகவும் துணிச்சலாக பொருளாதார நிபுணர் விவேக் தேப்ராய் ஒரு செய்தித்தாளில் எழுதிய கட்டுரையின் வடிவத்தில் வெளிவந்துள்ளது. விவேக் தேப்ராய் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுத் தலைவராக இருக்கும் வேளையில், அந்தக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள வாதங்கள் ஏற்கனவே அரசாங்கத்தால் அறிவிப்புகளாகவும் நடவடிக்கைகளாகவும் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், இந்தக் கட்டுரையை தொடர்பற்ற ஒரு தனிநபரின் கருத்துக்களாகக் கருதுவது முட்டாள்தனமாகவே இருக்கும். மாறாக, அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பை கேள்விக்குள்ளாக்கிய இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் மாநிலங்களவையில் சிலநாள் முன்னர் வெளியிட்ட அறிக்கையின் தொடர்ச்சியாகவே, விவேக் தேப்ராய் எழுதிய இந்தக் கட்டுரை பார்க்கப்பட வேண்டும்.*

**அரசமைப்புச் சட்டத்தின்படி ஆணையாக்கப் பட்டுள்ள கூட்டாட்சி கட்டமைப்பிலும் நிர்வாகத்துறை, சட்டமியற்றும் துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான அதிகாரப் பகிர்விலும் கூட, மோடி ஆட்சிக்கு மிகுந்த சிக்கல் உள்ளது என தெளிவாகவே தெரிகிறது.**

*வாஜ்பாய் கால தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கமும் கூட, ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி எம்.என்.வெங்கடாசலய்யா தலைமையில் பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டை மறுபரிசீலிக்கும் தேசிய ஆணையத்தை அமைத்ததன் மூலம் இந்த செயல்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முயன்றது. ஆனால் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு அல்லது அதன் அடிப்படை அம்சங்களில் தலையிடாமல், மாற்றங்களை பரிந்துரைக்க வேண்டும் என்றே அதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. 2004 தேர்தலில் வாஜ்பாய் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அதிர்ச்சித் தோல்வியால் இந்த செயல்திட்டத்தை தொடர முடியவில்லை. மேலும் இந்த ஆணையின் அறிக்கையை கண்டுகொள்பவர் எவரும் இல்லை. ஆனால் மோடி கால சட்டத் திருத்தங்களும் மசோதாக்களும் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்களையும் அதன் உணர்வையும் கீழ்நிலைப்படுத்தத் தொடங்கியுள்ளன. குடியுரிமையின் மதச்சார்பற்ற அடித்தளத்தைக் குடியுரிமை திருத்த சட்டம் சிதைத்துவிட்டது; பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு வழங்கப்பட்ட இடஒதுக்கீடு, சமூக அநீதிக்கும் சமத்துவமின்மைக்கும் எதிரான உறுதியான நடவடிக்கை என்பதாக இருந்த இடஒதுக்கீட்டின் அடிப்படைக் கொள்கைக்கு சவால் விட்டுள்ளது; ஜம்மு-காஷ்மீர் மற்றும் டெல்லியின் அரசமைப்புச் சட்ட உரிமைகள் பறிக்கப்பட்டதன் வழியாக, இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பு பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது; மேலும் அரசு நிறுவனங்களின் தன்னாட்சியும், குடிமக்களின் உரிமைகளும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் அரிக்கப்படுகின்றன.*

இந்தப் போக்குகளை அவற்றின் தர்க்க ரீதியான முடிவுக்கு கொண்டு சென்று, தொடர் திருத்தங்களுக்குப் பதிலாக முற்றிலும் புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு தேப்ராயின் கட்டுரை அழைப்பு விடுக்கிறது. தெளிவாகவே, அரசமைப்புச் சட்ட அடிப்படை கட்டமைப்பின் கோட்பாடுகள், சட்டத் திருத்தங்களுக்கான வரம்புகளை நிர்ணயிக்கிறது; மேலும் கூட்டாட்சி சமநிலைக்கும் அதிகாரப் பகிர்வுக்கும் கட்டுப்பட அரசாங்கங்களுக்கு நெருக்கடி தருகிறது; மேலும் அரசமைப்புச் சட்ட முன்னுரையில் சொல்லப் பட்டுள்ள குடியரசின் தன்மையும் அதன் அடிப்படை திசைவழியுமே, அதிகாரம் மற்றும் செல்வத்தின் தங்கு தடையற்ற குவிப்புக்கான மோடி அரசாங்கத்தின் உந்துதலுக்கு தொடர்ந்து சில தடைகளை ஏற்படுத்துகிறது. ஆக, இந்தத் தடையை கடக்க, முற்றிலும் புதிய அரசமைப்புச் சட்டம் என்பதன் வடிவில் ஒரு முழுமையான தீர்வு என்னும் கருத்தினை தேப்ராய் முன்வைத் துள்ளார்.

இந்து ராஷ்டிராவின் பழைமைவாத இந்துத்துவ இலக்குகளை நிறைவேற்றவும் மனுஸ்மிருதியை நிறுவனமயமாக்கவும் இது தேவைப்படுகிறது என புதிய அரசமைப்புச் சட்டத்திற்கு தேப்ராய் பரிந்து பேசவில்லை என்பது இங்கே சுவாரஸ்யமானது. அந்தக் குறிப்புகள் அவரது கட்டுரையில் வெளிப்படையாக இல்லை. இப்போதைய அரசமைப்புச் சட்டம் காலனிய மரபுக்கு சொந்தமானதாக இருப்பதால் அது தேவையற்றது; எனவே, ஒரு புதிய அரசமைப்புச் சட்டம் காலனிமயமகற்றல் திட்டத்திற்கானது என தேப்ராய் சொல்கிறார். குற்றவியல் நீதிக்கான சட்டங்களை மாற்ற முற்படும் போது அமித்ஷாவும் கூட இதே வாதத்தை முன்வைத் துள்ளார். தண்டனை குறித்த காலனிய கால கருத்திற்கு மாற்றாக குடிமக்கள் தங்களுக்கான நீதியைப் பெறுவதற்கான உரிமை குறித்து கவனம் செலுத்துவது என்ற உரத்த வாதத்துடன் இந்திய தண்டனைச் சட்டம், பாரதீய நியாய சன்ஹிதா என மாற்றப்படுவதற்கான முயற்சி நடந்துள்ளது. ஆனால் இந்த திசைதிருப்பல் பெயர் மாற்றத்திற்குப் பின்னாலுள்ள இந்தப் 'புதிய' சட்டம் காலனிய காலச் சட்டங்களை அடக்கு முறை மிகுந்தவையாகவும், விரிவானவையா கவும் ஆக்குகிறது.

அரசாளுகையின் 'செயல்திறனையும் வேகத் தையும்' அதிகரித்தல் என்பது புதிய அரசமைப்புச் சட்டத்திற்கான மற்றொரு அடிப்படைக் கூற்றாக முன்வைக்கப்படுகிறது. 'முடிவெடுப்பதற்கும்' 'விரைவாக செயல்படுத்துவதற்கும்' ஜனநாயகம் ஒரு தடையாக உள்ளது என சர்வாதிகாரம் எப்போதுமே முன்னிறுத்துகிறது. கோவிட் 19 பெருந்தொற்றின்போது தெள்ளத் தெளிவாக வெளிப்பட்ட, நாடாளுமன்றத்தையும் மக்களை யும் முடக்குதல், நாட்டின் வளங்கள் மீது கார்ப்பரேட் கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு தேவையான கொள்கை மாற்றங்களை செய்யவும், புதிய சட்டங்களை இயற்றவும் தேவையான அதிரடி நடவடிக் கைகளை அரசாங்கம் கட்ட விழ்த்துவிட்டபோது, நாடாளுமன்ற செயல் முறையின் திட்டமிடப் பட்ட சீர்குலைவை நாம் ஏற்கனவே கண்டோம். இந்த முறைமையை சட்டப்பூர்வமாக்கப்பட்ட அரசமைப்புச் சட்ட சர்வாதிகாரமாக நிறுவன மயப்படுத்த தேப்ராய் விரும்புகிறார்.

அரசமைப்புச் சட்டத்தில் பொறிக்கப் பட்டுள்ள முன்னுரையின் பிரகடனங்களும், அடிப்படை உரிமைகள் மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகளும் மட்டுமல்ல, ஒற்றையாட்சிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்த போதும் கூட, அரசமைப்புச் சட்டத்தின்படி ஆணையாக்கப் பட்டுள்ள கூட்டாட்சி கட்டமைப்பிலும், நிர்வாகத்துறை, சட்டமியற்றும் துறை, நீதித்துறை ஆகியவற்றுக்கு இடையிலான அதிகாரப் பகிர்விலும் கூட, மோடி ஆட்சிக்கு மிகுந்த சிக்கல் உள்ளது என தெளிவாகவே தெரிகிறது. அரசமைப்புச் சட்டம் இந்தியாவை, அதாவது பாரதத்தை மாநிலங்களின் ஒன்றியமாக அறிவிக்கிறது. மாநிலங்களின் அதிகாரங்களை பறிப்பதிலும், அவர்களின் அதிகார வரம்புக்குள் அத்துமீறல் செய்வதிலும் மோடி அரசாங்கம் மும்முரமாக செயல்படுகிறது. பாஜக அல்லாத கட்சிகள் ஆளும் மாநில அரசாங்கங்களுக்கு தடைகளை ஏற்படுத்தவும், அவற்றை சீர்குலைக் கவும், கவிழ்க்கவும், ஆளுநர்களையும், பல்வேறு மத்திய நிறுவனங்களையும் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. இப்போது நிர்வாகத்துறையின் மூலம் நீதித்துறையை அதன் ஒவ்வொரு செயல்பாட்டிலும் எவ்வகை யிலேனும் மட்டம் தட்டுவதையும் தவிர்ப் பதையும் செய்து வருகிறது. தலைமை நீதிபதிக்கு எதிராக இதுபோன்ற ஒரு கெடுநோக்கான பரப்புரையும், நிர்வாகத்துறையின் உக்கிரமான பயணத்தைத் தடுக்க, சரிசெய்ய முயற்சிக்கும் உச்ச நீதிமன்றத்தின் ஒவ்வொரு தீர்ப்பையும் இதுபோன்று திட்டவட்டமாக கீழ்நிலைப்

படுத்துவதும் இதற்கு முன்பு எப்போதும் செய்யப்பட்டதில்லை.

அதன் தொடக்க காலத்திலிருந்தே முசோலினி மற்றும் ஹிட்லரின் பாசிச மாதிரி களில் இருந்து உத்வேகம் பெறும் ஆர்எஸ்எஸ், இஸ்ரேலின் சியோனிச மாதிரியை அதிகரித்த அளவில் பின்பற்றி வருகிறது. தற்போது இந்திய உச்ச நீதிமன்றத்துடன் மோடி அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கும் போர், இஸ்ரேலில் பொது மக்களின் மாபெரும் எதிர்ப்புகளைத் தூண்டி விட்ட நெதன்யாகு ஆட்சியின் நீதித்துறை மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஒத்திருக்கிறது. அரசமைப்புச் சட்டமே நவீன இந்தியாவின் அடித்தளம் ஆகும். கடந்துபோன ஆயிரம் ஆண்டுகால'அடிமைத்தளை'யிலிருந்து, வரவிருக்கும் ஆயிரம் ஆண்டுகால 'பொற்காலம்' நோக்கி நகருவதைக் குறிக்கிற ஒரு நவீன கால இந்துப் பேரரசராக இன்று மோடி தன்னை காட்டிக் கொள்ள முற்படுகிறார். அவரது பக்தர்களோ அவரை இந்து இதயங்களின் பேரரசர் என்று அழைக்கிறார்கள். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான இந்தியாவின் நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பிறகு ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தால் கொண்டுவரப்பட்ட இந்தியக் குடியரசு, அதன் அடித்தளங்களின் நெருக்கடியையும் சவாலையும் எதிர்கொள்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவின் 'மறக்கப்பட்ட பாரம்பரியத்தின்' மறுமலர்ச்சி என்று தேப்ராயால் போற்றப்படும், முடியாட்சியின் சின்னமான செங்கோல் நிறுவப்பட்ட புதிய நாடாளுமன்றக் கட்டிடம், சங்கிப் படைப்பிரிவின் பார்வையில், அதன் நேசத்துக்குரிய 'புதிய இந்திய' கட்டிடக்கலையின் வருகையை ஏற்கனவே அறிவித்து விட்டது. சுதந்திர இந்தியாவின் அரசமைப்புச் சட்ட அடித்தளத்தை சிதைக்கும் இந்த செயல் முறையை, புதிய அரசமைப்புச் சட்டத்திற்கான தேப்ராயின் வாதம் முழுமைப்படுத்த முயல்கிறது. எனவே இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான கெடுநோக்குடைய இந்தப் பரப்புரை அதன் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசான சுதந்திர இந்தியாவை, அச்சம், மதவெறி, அடிமைத்தளையின் புதிய குடியரசாக ஒரு போதும் பரிமாற்றம் செய்யவே முடியாது.

எம்எல் அப்டேட் தலையங்கம் 22–28 ஆக. 2023

**தமிழாக்கம் – செந்தில்**

## இந்தியா நிலவில் தரையிறங்கியிருக்கிறது, இந்திய வகுப்பறையோ கொடூர முகாமாக மாறிவருகிறது

**மதவெறுப்பு, வெறுப்பு இவற்றின் பலிபீடத்தில் அறிவியல் மனப் பான்மை பலியிடப்படுவதில் வியப்பேதுமில்லை.**

சந்திராயன்-3 வெற்றிகரமாக நிலவில் இறங்கியிருப்பது நிச்சயமாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் வரலாற்று சாதனையாகும். நிலவுப் பயணம் ஒன்று, நிலவின் தெற்கு முனையில் கால்பதித்திருப்பது முதல் முறையாகும். நிலவின் உண்மை நிலை குறித்து மேலதிக படிப்புக்கும் கண்டு பிடிப்புகளுக்குமான வாய்ப்புகளைத் இது திறந்து விடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் அறிவியல் வல்லமையில் இது போன்றதொரு மைல்கல் பொதுவாக அறிவியல் தொழில் நுட்பத்திலும் குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சியிலும் இந்தியாவின் ஒட்டுமொத்த முன்னோக்கிய பயணத்தை உந்திச் செலுத்தும் ஆற்றல் கொண்டதாகும். மேலும் தற்போதைய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கையின்படி பார்த்தால் துவாரகா விரைவுச் சாலை கட்டுமானத்தில் மூன்று கிலோ மீட்டர்களுக்கு ஆகியுள்ள செலவை விட குறைவான செலவில் சந்திராயன் வெற்றி செயல்படுத்தப் பட்டிருப்பது நெஞ்சைக் குளிர்விக்கும் செய்தியாகும். சந்திராயன்-3 திட்டத்தின் உறுப்பினர்களும் இந்திய

விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் ஒட்டு மொத்த ஊழியர்களும் இந்த வெற்றிக்கு பங்களித்த தொடர்புடைய மற்ற அமைப்புகளின் ஊழியர்களும் நிச்சயமாக நமது இதயம் நிறைந்த பாராட்டுக்களுக்கு உரியவர்களாவர்.

சந்திராயன்-3 வெற்றிக்கு சொந்தம் கொண்டாடுவதில் மோடி அரசாங்கம் மிகத் தீவிரமாக உள்ளது. ஆனால், நெருங்கிச் சென்று பார்த்தால் இந்த திட்டம், உண்மையில் அரசாங்கத்தினுடைய புறக் கணிப்பைத் தாண்டியும் வெற்றி பெற்றுள்ளதைச் சொல்கிறது. ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். சந்திராயன்-3க்கான நகரும் ஏவு தளத்தை தயாரித்து குறித்த காலத்துக்கு முன்பே வழங்கிய ராஞ்சியை சேர்ந்த கனரக பொறியியல் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்களும் பொறியியலாளர்களும் கடந்த 18 மாதங்களாக ஊதியம் பெறவில்லை! இந்தியாவின் ஸ்டீல் ஆலைகளுக்கு இந்த கனரக பொறியியல் கழகமே தாய் நிறுவனமாகும். இன்று இந்த நிறுவனத்துக்கு செயல் மூலதனத்தை வழங்காமலும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்காமலும் மோடி அரசாங்கம் இந்த நிறுவனத்தை நலிவுற்ற நிறுவனமாக்கி விட்டது. ஆயினும் இந்த திட்டம் வெற்றியடைந்த போது, லட்சோப லட்ச இந்தியர்கள், இந்தியா நிலவில் கால்பதித்த இந்த வரலாற்று தருணத்தை தங்கள் அலைபேசிகளில் கண்கொட்டாமலும் கம்யூட்டரிலும் (கணிப் பொறியிலும்) தொலைக் காட்சி திரைகளிலும் கண்டுகளித்துக் கொண்டிருக்கும் போது, மோடியோ தொலைக்காட்சித் திரைகளை குத்தகைக்கு எடுத்து லோலோவென உரையாற்றிக் கொண்டிருந்தார்.

நிலவுப்பயணத்தை ஒரு அரசியல் பரப்புரையாகவும் தேர்தல் ஆதாயமாக கறக்கும் மூர்க்கத் தனமான முயற்சியாக, மோடி அரசாங்கம் இதை பிரதமருக்கான ஒரு விளம்பர மேடையாக ஆக்கிக் கொண்டது. மட்டுமின்றி, மத மூடநம்பிக் கையும் நவீன அறிவியலும் கொண்ட வேடிக்கையானதொரு கலவையை உருவாக்கியிருக்கிறது. அறிவியல் உளப்பாங்கு முன்னேற்றுவதற்கான ஒரு உந்துதலாக நிலவுப் பயணத்தை பயன்படுத்திக் கொள்வதற்கு பதிலாக, மத மூடநம்பிக்கையுடன் இணைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விக்ரம் தரையிறங்கி (இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சியின் அடித்தள உணர்வாக விளங்கிய விக்ரம் சாராபாயின் பெயர் சூட்டப்பட்ட) கால்பதித்த முனைக்கு அவசர அவசரமாக சிவசக்தி என்று பெயரிட்டதன் மூலம் திட்டவட்டமாக ஒரு இந்துமதக் குரலை மோடி வெளிப்படுத்திருக்கிறார். மோடியோ கடவுள் சிவன் பெயரை சூட்டியதோடு நிறுத்திக் கொள்ள, அதிலிருந்து (தக்க) குறிப்பை எடுத்துக் கொண்ட இந்து மகாசபா தலைவரொருவரோ சிவசக்தி முனையை தலைநகராகக் கொண்டு நிலவை இந்து ராஜ்யமாக அறிவிக்குமாறு கோரிக்கையும் விடுத்திருக்கிறார்! இது அதீத தீவிரமாக ஒலிப்பதாகத் தோன்றினால், நிலவுப் பயணத்தோடு தொடர்புடைய பெண் விஞ்ஞானிகளை கொண்டாடும் முயற்சியின் மூலம் அவர்களின் மத நம்பிக்கையை தூக்கிக் காட்டுவதோடு, மதத்தில் வேர் கொண்டிராத அறிவியலை மதத்தோடு இணைக்கப்பட்ட தான 'லட்சியமான இந்தியப் பெண்ணாக' சித்தரித்துக் காட்டுகிறது.

இந்திய விண்வெளிக் கழகம் செய்த சாதனை பல பத்தாண்டு கால ஆராய்ச்சி, இடைவிடாத உழைப்பின் விளைவாகும். எல்லா திட்டங்களும் வெற்றியடைந்து விடுவதில்லை. ஆனால் அறிவியலாளர்கள் தோல்வியிலிருந்து படிப்பினை பெறுகிறார்கள். தோல்வியுற்ற சந்திராயன்-2, சந்திராயன்-3 வெற்றிக்கு வழிவகுத்தது. இந்திய விண் வெளிக் கழகத்தின் அறிவியல் சமுதாயத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள், சுதந்திரத்துக் குப்பின் முதல் சில பத்தாண்டு களில் நவீன இந்தியா உருவாக்கிய பொது நிதியில் கட்டப்பட்ட கல்வி, ஆராய்ச்சி நிறுவனங் களால் உருவாக்கப்பட்டவர்களே. பொதுத் துறை நிறுவனங்கள் போலவே, கல்வியும் ஆராய்ச்சியும் தனியார் மயத்தை நோக்கித் தள்ளப்படுவதன் மூலம் பொது நிதியில் உருவாக்கப்படும் கல்வியும் ஆராய்ச்சியும் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறது, வலு விழக்கச் செய்யப்படுகிறது. உயர்கல்விக் கூடங்களில் மூடநம்பிக்கை கலாச்சாரம், ஜால்ரா போடுதல், அச்சம், அமைதி இவற்றை முன்னேற்ற, கேள்வி உணர்வும் கல்விச் சுதந்திரமும் வளாக ஜனநாயகமும் நெரிக்கப் பட்டு வருகிறது. மதவெறுப்பு, வெறுப்பு இவற்றின் பலிபீடத்தில் அறிவியல் மனப் பான்மை பலியிடப்படுவதில் வியப்பேது மில்லை. இதன் அச்சமூட்டும் விளைவுகள் நம்மை நேருக்கு நேர் (முகத்தில்) அச்சுறுத்து வதாகவே உள்ளன.

இதற்கிடையில், (உபி) முசாபர்நகர் பள்ளியொன்றில் கணக்கு வீட்டுப்பாடம் எழுதாத ஏழு வயதே ஆன இஸ்லாமிய மாணவனை ஆரம்பப் பள்ளி முதல்வர் ஒருவர்

சக மாணவர்களைக் கொண்டு அடிக்கச் சொல்வதும் முதல்வர் பொதுவில் இஸ்லாமியர்களை வசைபாடுவதுமான வகுப்பறை ஒளிப்படக் காட்சி, இட்லரது நாஜி ஜெர்மனியின் வகுப்பறைகளில் எவ்வாறு யூதக் குழந்தைகள் அவமானப்படுத்தப்பட்டு துன்புறுத்தப்பட்டனரோ அதை நினைவுபடுத்துவதாகவே உள்ளன. சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பிறகு, ரயில்களிலிருந்து தெருக்கள், தொலைக் காட்சி நிலையங்கள் வரை டிஜிட்டல் மேடைகளிலிருந்து வகுப்பறைகள், வளாகங்கள் வரையிலும் மொத்த இந்தியாவையுமே வெறுப்பு கையகப்படுத்திக் கொள்ளுமென அச்சுறுத்துகிறது. 'லவ் ஜிகாத்' (காதல் விடுதலை)தை எதிர்த்துப் போராடுவது என்ற பேரால் சங்கிகளால் 2013ல் ஊதிப் பெரிதாக்கப்பட்ட மய்யப் பகுதிதான் முசாபர்பூர் நகரம். விவசாயிகள் இயக்கம், அந்த வெறுப்பையும் பிளவுகளையும் வென்று புதுப்பிக்கப்பட்ட ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டது. இன்று, மீண்டும் வெறுப்பு, வன்முறை சக்திகள், மேற்கு உபியிலும் அரியானாவிலும் அந்த ஒற்றுமைக்கு சவால் விடுகின்றன; இந்த சதிச்செயலை முறியடிக்க விவசாயிகள் இயக்கமும் அமைதி, நீதியை நேசிக்கும் சக்திகள், தீர்மானகரமான எதிர்ப்பு போராட்டத்தைத் கட்டமைக்க வேண்டும்.

வெறுப்பு, சித்தரவதை அரங்கமாக மாறிவிட்ட அந்தப் பள்ளியின் குற்றம்புரிந்த முதல்வர் திருப்தி தியாகியை வெளிப்படையாகவே பாஜக தலைவர்கள் ஆதரிக்கின்றனர். அந்தப் பள்ளி தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் மாணவர்கள் வேறு பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆதிக்க சமூக, அரசியல் சக்திகளும், கெடுவாய்ப்பாக சில போலியான விவசாய இயக்கத் தலைவர்களும் அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட அந்த மாணவனது குடும்பத்தினர் வழக்குப் போடுவதை தவிர்க்க வேண்டுமென்றும் சமரச உடன்பாட்டுக்கு வர வேண்டுமென்றும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இதுபோன்ற விஷயங்களில், நல்லிணக்கம் நிச்சயமாக உண்மை, நீதி அடிப்படையில் எட்டப்பட வேண்டும். நிச்சயமாக, உண்மையையும் நீதியையும் விலையாகக் கொடுத்து அடையப்படமுடியாது. வெறுப்பை விளைவிப்பவர்களும் வன்முறையை நடத்துபவர்களும் பாதுகாக்கப் படுகின்றனர்; ஆனால் இந்தக் கோர சம்பவத்தின் மீது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததற்காக உண்மைக் கண்டறியும் முகமது சுபைர் மீண்டுமொருமுறை குறிவைக்கப்படுகிறார்.

இந்த வன்முறை சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்ட குழந்தையுடன் இந்தச் செயலை செய்யுமாறு ஊக்குவிக்கப்பட்டவர்களும் அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்களும் இந்த பாசிச கொடூரத்தால் பாதிக்கப்பட்டவர்களே என்பதை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். பாசிச பரப்புரையாளர்களால் நாள்தோறும் நடத்தப்படும் இந்த வெறுப்பு இயக்கம், அது அரசியல் அல்லது மத பதாகைகளாலும் தொலைக்காட்சி நெறியாளர்களால் அல்லது கருத்து உருவாக்குபவர்களால் அல்லது பல்வேறு சமூக ஊடகங்களால் செல்வாக்கு செலுத்துபவர்களாலும் இப்போது, எதுவும் எளிதில் பதிகிற இந்தியக் குழந்தைகளின் ஆரம்பப்பள்ளி வகுப்பறைகளில் நுழைந்து விட்டார்கள்.

ஆபத்தான இந்த அறிகுறியை அலட்சியப் படுத்துவது, இன்னும் பெரிய ஆபத்துகளுக்கே வரவேற்பளிக்கும்.

**தமிழாக்கம் – பாசு**

எம்எல் அப்டேட் தலையங்கம் 29 ஆக –04 செப். 2023

## அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக கரூர் மாவட்ட மாநாடு

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின், கரூர் மாவட்ட முதல் மாநாடு, கரூர் நகரம், செங்குந்தபுரத்தில் 27.08.2023 ஞாயிறு அன்று நடைபெற்றது. மாநாட்டில் தோழர்கள் பிலோமினா, சாந்தி, புஷ்பம், கலைமணி, மகேஸ்வரி, நந்தினி, கவிதா, சாந்தி, மல்லிகா, மகேஸ்வரி, பத்மா, லட்சுமி உள்பட 13 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. தோழர் சாந்தி மாவட்டத் தலைவராகவும் தோழர் பிலோமினா மாவட்டச் செயலாளராகவும் தோழர் புஷ்பம் மாவட்டத் துணைத் தலைவர் தோழர் கலைமணி, மகேஸ்வரி துணைச் செயலாளர்களாகவும் தேர்வு செய்யப்பட்டனர். ஏஐசிசிடியு மாவட்டச் செயலாளர் தோழர் மா.பால்ராஜ், சிபிஐ(எம்எல்) மாவட்டச் செயலாளர் தோழர் மு.இராமச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினர்.

# ஓபிஎஸ் (பழைய ஓய்வூதியத் திட்டம்) வேண்டும்! மாற்றியமைக்கப்பட்ட என்பிஎஸ் (புதிய ஓய்வூதியத் திட்டம்) வேண்டாம்!

வீ.சங்கர்

*கீன்சியனுக்குப் பிந்தைய காலகட்டத்தின் நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான ஒரு சர்வரோக நிவாரணியாக உலக மூலதனத்தால் கண்டுபிடிக்கப்பட்டதுதான் நவதாராளவாதக் கொள்கை. அந்தக் கொள்கைகள் அமல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்ததன் விளைவாக, ஒரு கண்ணியமான ஓய்வூதியத்திற்கான இயக்கம் பெரும் முக்கியத்துவமிக்க ஒன்றாகவும் உலகம் முழுவதும் வேகமாக பரவிவருவதாகவும் மாறியுள்ளது. புதிய தாராளமயக் கொள்கைகளின் அறிமுகத்துடன் மக்கள் நல அரசு என்ற கருத்தின் முடிவு தொடங்கியது. ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் தனியார்மயமாக்கப்பட்டதால் ஓய்வூதிய நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளது. பங்களிப்பு ஓய்வூதியம் என்ற ஒன்று அறிமுகம் செய்யப்பட்ட போதே, ஓய்வூதியம் என்பது வரையறுக்கப்பட்ட பயனளிப்பு என்ற கருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஓய்வூதியம் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புப் பொறுப்பும் தொழிலாளர்களின் தோள்களிலேயே சுமத்தப்பட்டுவிட்டது. தங்கள் ஊழியர்களை முதிய காலத்தில் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கமும் முதலாளிகளும் தட்டிக்கழிக்கின்றனர். ஓய்வூதியப் பிரச்சினை என்பது முதுமையில் வறுமை என்ற பிரச்சினையே தவிர வேறில்லை.*

**தங்கள் ஊழியர்களை முதிய காலத்தில் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கமும் முதலாளிகளும் தட்டிக்கழிக்கின்றனர். ஓய்வூதியப் பிரச்சினை என்பது முதுமையில் வறுமை என்ற பிரச்சினையே தவிர வேறில்லை.**

## ஓய்வூதியம் ஓர் அரசியல் பிரச்சினை

*நாட்டில் உள்ள தொழிலாளர் இயக்கத்தின் நெருக்கடியைத் தாங்க முடியாமலும், பாஜக ஆளும் மத்திய அரசுக்கு எதிரான ஒரு எதிர் நடவடிக்கையாகவும், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஜார்கண்ட், பஞ்சாப், ஹிமாச்சல் பிரதேசம் போன்ற பாஜக அல்லாத சில மாநிலங்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்தை (ஓபிஎஸ்) திரும்பக் கொண்டு வர முடிவு செய்துள்ளன. ஆனால், மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசு, ஓய்வூதிய நிதிக் கட்டுப்பாடு மற்றும் வளர்ச்சி ஆணையத்தின் மூலம் அதே ஊழியர்களிடம் இருந்து தேசிய ஓய்வூதியத் திட்டம் (என்பிஎஸ்) என்ற பெயரில் 2004 முதல் வசூலித்த பணத்தைத் திரும்பக் கொடுக்க மறுத்து, இந்த செயல்முறைக்கு தடைகளை உருவாக்கி வருகிறது.*

*ஓய்வூதியப் பிரச்சினை ஓரஞ்சாரமான ஒரு பிரச்சினையாக இப்போது இல்லை. 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக பூதாகரமான ஒரு முக்கிய அரசியல் பிரச்சினையாக இது உருவெடுத்துள்ளது. உ.பி., இமாச்சலப் பிரதேசம் போன்ற பல சட்டமன்றத் தேர்தல்களிலும் கூட, இது ஒரு முக்கிய அரசியல் பிரச்சினையாக இருந்தது. பாஜகவும் வேறு சில கட்சிகளும் தவிர, பல்வேறு அரசியல் கட்சிகளும் அரசு*

ஊழியர்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பக் கொண்டு வருவோம் என தேர்தல் வாக்குறுதி களை அளித்தன. இந்த பின்னணியில் தான், நிதியமைச்சர் தனது கடைசி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யும் உரையில், தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள சிக்கல்களையும், சாத்தியமான மேம்பாடுகளையும் ஆராய, நிதிச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை அறிவித்தார். இது பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பக் கொண்டு வர வேண்டுமென்ற தொழிலாளர்கள் இயக்கத்தின் கோரிக்கைகளுக்கு எதிரானது. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன், மோடி தலைமையிலான பாஜக அரசாங்கம் ஒப்பீட்ட ளவில் அதிக ஓய்வூதியத்துடன் கூடிய, மேம்படுத்தப்பட்ட என்பிஎஸ்ஐ, அறிவிக்கலாம் என்ற ஊகங்கள் உள்ளன. ஓபிஎஸ்ஐ திரும்பக் கொண்டு வரப்போவதில்லை என்றும், தற் போதுள்ள என்பிஎஸ் திட்டத்தில் சில மேம்பாடுகள் மட்டுமே செய்யப்படும் எனவும் அரசு தனது நோக்கத்தை ஏற்கனவே தெளிவு படுத்தியுள்ளது.

## நவ தாராளவாத தர்க்கமும் கொழுத்த லாபமும்

1947ல் சராசரி இந்தியரின் ஆயுட்காலம் 32 ஆண்டுகள் என இருந்ததை ஒப்பிடும்போது, 2020ல் ஆயுட்காலம் 70 ஆக உயர்ந்துள்ள பின்னணியில், ஓய்வூதியத்திற்கான கோரிக்கை முதுமையில் வறுமையை வெல்லும் முயற்சி யாகும். புதிய தாராளமய பொருளாதார தத்துவத்தால் வழிநடத்தப்படுகிற உலகெங்கிலும் உள்ள நாடுகள், ஒருபுறம் ஓய்வூதிய வயதை அதிகரிப்பதன் மூலமும், மறுபுறம் அதைப் பெருமளவுக்கு தொழிலாளர்கள் பங்களிக்கும் திட்டமாக ஆக்குவதன் மூலமும், ஓய்வூதியம் காரணமாக பொருளாதாரத்தின் மீது ஏற்படும் நிதிச் சுமையை குறைக்க முயற்சிக்கின்றன. அதிஉயர் இலாப நோக்கத்தால் உந்தப்படுகிற உலக மூலதனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இது சமூகப் பொறுப்பற்ற, அறிவியலற்ற அணுகு முறையாகும்.

## வளர்ந்து வரும் முதியோர் மக்கள் தொகை

இந்தியாவில் மக்கள் தொகையின் சராசரி தற்போது ஒப்பீட்டளவில் இளமையாக உள்ளது. ஆனால் 2050ஆம் ஆண்டில் அதன் முதுமை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலக மக்கள்தொகையில் 30 சதவீதமும், இந்திய மக்கள்தொகையில் தோராயமாக 20 சதவீதம் பேரும் 2050 ஆம் ஆண்டளவில் ஓய்வூதியத்தை நம்பியிருக்க வேண்டியவர்களாக இருப்பார்கள் என சில மதிப்பீடுகள் கருத்துரைக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் 60 வயதுக்கு மேற்பட்ட குடிமக்களின் மக்கள்தொகையில் 50 லட்சத்திற்கும் அதிகமானோர் இணைவதாக மதிப்பிடப் பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலையில், ஓய்வூதியம் பற்றிய கேள்வி உயிர்ப்புடன் இருக்கிற பிரச்சினையாகும்.

தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பின் ஆய்வறிக்கையின்படி, 1981 இல், இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 5.6 சதவீதம் பேர் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினராக இருந்தனர்; ஆனால் 2021 இல், இந்த விகிதம் 10.1 சதவீதமாக அதிகரித்துள்ளது. 'இந்தியா மற்றும் மாநிலங்களுக்கான மக்கள் தொகை கணிப்புகள் 2011' பற்றிய தொழில் நுட்பக் குழுவின் அறிக்கை, 2021 ஆம் ஆண்டில் இந்தியாவில் கிட்டத்தட்ட 13.8 கோடி முதியவர்கள் இருந்தனர் என்றும், 2031ஆம் ஆண்டில் அவர்களின் எண்ணிக்கை மேலும் 5.6 கோடி அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுவதாக கூறுகிறது.

## ஓய்வூதியம் என்பது உதவிப் பணம் அல்ல; அது உரிமை

முதியோர் மக்கள்தொகை என்பது பொருளாதாரத்தை சீர்குலைக்கும் ஒரு சுமை என்று அரசாங்கம் வாதிடுகிறது. ஆனால், அதன் சொந்த ஊழியர்கள் அவர்களுடைய முதுமையை எட்டும் போது அவர்களை பராமரிக்க வேண்டிய அதன் பொறுப்பு பற்றி எதுவும் கூறவில்லை. அரசாங்கத்திற்கு அதனுடைய ஊழியர்களின் முதுமை காலப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. அவர்கள் தங்கள் இளமையை நாட்டுக்காகவும், அரசுக்காகவும் செலவிட்டவர்கள். எனவே, அவர்களின் முதுமைக் காலத்தில் அவர்களுக்கு மரியாதைக் குரிய, கண்ணியமான வாழ்க்கையை வழங்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அரசாங்கமும் சுயநல நோக்கங்களால் உந்தப்பட்டு, நாட்டின் மீதும் மக்களின் வரிப்பணத்தின் மீதும் அவர்கள் சுமையாக உள்ளனர் என்கிறது.

ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் நிறுவனங்களிலிருந்தோ அல்லது அரசாங்கத்தி

லிருந்தோ வழங்கப்படும் தொண்டல்ல; மாறாக, அது அவர்களின் உரிமை என்று நாட்டின் உச்ச நீதிமன்றமும் சர்வதேச தொழிலாளர் அமைப்பும் தெளிவாகக் கூறியுள்ளன. ஓய்வூதியம் என்பது அவர்களின் சொந்த உழைப்பின் முதலீட்டுக்கு கிடைக்கும் பலன். அதனை அவர்களின் ஒப்புதல் இன்றி மறுக்கவோ அல்லது வேறு எதற்கும் திசைதிருப்பி விடவோ முடியாது. ஓய்வூதியம் என்பது ஒரு ஊழியரின் சம்பளத்தில் அவர்கள் பணியில் இருக்கும் போது அவர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் ஒரு பகுதி ஆகும். இருந்தபோதிலும், அரசாங்கம் 2004 முதல் ஊழியர்களுக்கும் அடுத்த தலைமுறையினருக்கும் பாதுகாப்பற்ற எதிர்காலத்தை உருவாக்கும் வகையில், வரையறுக்கப்பட்ட பயனளிக்கும் திட்டத்தை மாற்றியமைத்து, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை வடிவமைத்தது. அரசாங்கம் அவர்களின் உரிமையை மறுத்து, ஊழியர்களின் எதிர் காலத்தை வலுக் கட்டாயமாக அவர்களிடமிருந்து பறிக்கிறது.

– தொடர்ச்சி அடுத்த இதழில்...

# விண்ணில் பாதி மண்ணில் பாதி

**பீகார் மாநில திட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை 32 நாட்கள் வெற்றிகரமாக தலைமையேற்று நடத்திய ஏஐசிசிடியு அகில இந்திய துணைத் தலைவரும் ஆஷா தொழிற்சங்கத் தலைவருமான தோழர் சசி யாதவ் தீப்பொறிக்காக தோழர் ரஞ்சனிக்கு அளித்த பேட்டி. தமிழாக்கம் – தேசிகன்**




**கேள்வி:** *இந்தியாவில் திட்டத் தொழிலாளர்களின் உரிமைக்கான நீண்ட நெடிய போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அகில இந்திய திட்டத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்குவதில் நீங்கள் முக்கிய பங்காற்றியுள்ளீர்கள் என்பது மாத்திரம் அல்ல, விடாப்பிடியான போராட்டத்தை வழிநடத்தியும் வருகிறீர்கள். திட்டத் தொழிலாளர்கள், "தொழிலாளர்" என்று அங்கீகரிப்பதற்குப் பதிலாக அவர்கள் "சேவை வழங்குபவர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். திட்டத் தொழிலாளர்கள் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் சொல்ல முடியுமா? யாரெல்லாம் திட்டத் தொழிலாளர்கள்?*

**பதில்:** மத்திய அரசின் திட்டங்களில் சுமார் 1 கோடி பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். சுகாதாரத் துறையில் ஆஷா என்ற பெயரிலும், ஆஷா உதவியாளர் என்ற பெயரிலும் பல்வேறு மாநிலங்களில் திட்டத் தொழிலாளர்கள் பணி புரிகின்றார்கள். தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ் அவர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவருமே பெண்கள்தான். பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தில் பணிபுரிபவர்களில் 95 சதவீதத்தினர் பெண்களே. அடுத்து அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களாகிய பெண்கள், உணவு சமைத்து அளிப்பது, ஊட்டச்சத்து வழங்குவது, ஆரம்பகால குழந்தை பராமரிப்பு, கருவுற்ற தாய்மார்களை கவனிப்பது ஆகிய பணியில் ஈடுபடுகின்றனர். இப்படி அவர்கள் செய்யும் பணிகளுக்கு அவர்களே முழு பொறுப்பானவர்களாகவும்

இருக்கிறார்கள். ஆனால், அவர்களை தொழிலாளியாகவோ அல்லது ஊழியராகவோ அந்த துறைகள் கருதவில்லை. அதனால் அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய அடிப்படையிலான கூலி வழங்கப்படுவதில்லை. எவ்வித சமூகப் பாதுகாப்புத் திட்டமும் அவர்களுக்கு இல்லை. பீகாரில் நீண்ட, விடாப்பிடியான போராட்டத்திற்கு பிறகு இப்போதுதான் மாதம் ரூபாய் 6500 7000 வரை பெறுகிறார்கள். இங்கு மதிய உணவுத் திட்ட ஊழியர்கள் வெறும் ரூபாய் 1650 மட்டுமே பெற்று வருகிறார்கள். அங்கன்வாடி ஊழியர்களுக்கும் உதவியாளர்களுக்கும் ரூபாய் 7000க்கும் குறைவாகவே ஊதியம் உள்ளது.

**கேள்வி:** *மற்ற அரசு ஊழியர்களிலிருந்து இவர்கள் எப்படி வேறுபடுகிறார்கள்?*

**பதில்:** அரசு ஊழியர்கள் போலவே திட்டத் தொழிலாளர்களின் பணியும் உள்ளது. ஆனால், அரசு ஊழியர் என்ற அந்தஸ்து அளிக்கப்படாமல் இருப்பதற்காகவே அவர்கள் திட்டத் தொழிலாளர்களாக பணிக்கமர்த்தப் பட்டிருக்கின்றனர். இது நவீன கால அடிமை முறை. இது கூலியை திருடுவதற்கான தாராளமயமாக்க கொள்கையின் மோசமான ஏற்பாடாகும்.

**கேள்வி:** *ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டம் இன்ன பிற என மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்கள் உள்ளன. வேலையின் அளவு, மதிப்பூதியம் இதர பயன்கள் என்ற விசயத்திலுள்ள ஒத்த தன்மைகள்/ வேறுபாடுகள் என்னென்ன?*

**பதில்:** எல்லா வேலைகளுமே தனித்தனியானவை. இவர்கள் வேறு, வேறு துறைகளின் கீழ் வேலை செய்பவர்கள். ஆனால், அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய சட்ட அடிப்படையிலான கூலி கிடையாது என்பதே அனைவருக்கும் பொதுவானது. அவர்கள் அரசு ஊழியர்களாக கருதப்பட மாட்டார்கள். இவை எல்லாம் மத்திய அரசால் நடத்தப்படுகிற தேசிய அளவிலான திட்டங்கள். மோடி அரசாங்கம் அடிப்படை உரிமைகளை, கோரிக்கைகளை மறுத்து வருகிறது. அது சமீபத்திய பட்ஜெட்டிலும் வெளிப்பட்டிருக்கிறது.

**கேள்வி:** *திட்டங்களில் பெரும்பாலும் பெண் தொழிலாளர்கள் பணி புரிவதாக தெரிகிறது. எண்ணிக்கையில் பெண்களின் பங்கு எவ்வளவு இருக்கும்? அப்படி இருப்பதற்கான காரணம் என்ன?*

**பதில்:** பெண்கள் தான் முதன்மையாக தீர்மானிக்கக்கூடிய சக்தியாக திட்டங்களில் வேலை செய்கின்றனர். பெண் தொழிலாளர் பற்றிய அரசாங்கத்தின் அணுகுமுறை கேள்விக்குரியது. அவர்கள் பெண்கள் உழைப்பையும் திறனையும் மலிவானதாகவும் குடும்பத்துக்கு இது கூடுதல் வருமானம் என்றும் பார்க்கிறார்கள். இது அரசாங்கத்தின் ஆணாதிக்க, நிலப்பிரபுத்துவ எண்ணத்தை பிரதிபலிப்பாக உள்ளது. இந்த காரணத்தால் தான், திட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. திட்டவட்டமாக நமது தொழிற்சங்கம் இந்த கோரிக்கையை எழுப்பியிருக்கிறது. பெண்களுக்கு தனி ஓய்வறை, மாதவிடாய் கால விடுமுறை, பாலியல் புகார்களை தீர்ப்பதற்கான பொறியமைவு, கிராமப்புற பகுதிகளில் பணி செய்யும் போது உரிய பாதுகாப்பு போன்ற பல பிரச்சனைகளை நாம் துவக்கத்திலருந்தே எழுப்பி வருகிறோம்.

**கேள்வி:** *இந்த மிகக் குறைந்த மதிப்பூதியம் கிராமப்புற ஏழை பெண் தொழிலாளர்களின் கடின உழைப்பை எப்படி ஈடுகட்டும்? திட்டத் தொழிலாளர்களின் நிலை மோசமானதாக இருந்த போதிலும் அவர்கள் கிராமப்புற ஏழைகளுக்கு சேவை வழங்கி வருகின்றனர். கிராமப்புற ஏழைகளின் அடிப்படை ஊட்டச்சத்து, கல்வி, சுகாதார தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டத் தொழிலாளர்கள் வறுமை எனும் சுற்றில் சுழன்று கொண்டிருக்கிறார்களா?*

**பதில்:** ஆமாம். திட்டத் தொழிலாளர்களுமே கடுமையான வறுமையில் உழல்கின்றனர். விலைவாசி உயர்வை ஈடுகட்ட அவர்களுக்கு பஞ்சப்படி வழங்கப்படுவதில்லை. பல வருடங்களாகவே அவர்களின் மதிப்பூதியமும் இதர படிகளும் உயர்த்தப்படவே இல்லை.

**கேள்வி:** *திட்டத் தொழிலாளர்களை அமைப்பாக்க ஆரம்ப கட்டத்தில் என்னென்ன சவால்களை பிரச்சனைகளை எதிர் கொண்டீர்கள்? மிகவும் அமைப்பு சாரா தன்மை கொண்ட, பூகோள ரீதியாக பிரிந்து கிடக்கிற திட்டத் தொழிலாளர்களை தொழிற்சங்க அமைப்புக்குள் கொண்டுவர எடுத்துக்கொண்ட இயக்கப் போக்கு பற்றி விரிவாக சொல்ல முடியுமா?*

**பதில்:** அவர்கள் பணிக்கு சேருமிடங்கள் பிரிந்து கிடப்பதால் அவர்களிடம் குழு மனப்பான்மையோ அல்லது சகோதரத்துவ உணர்வோ மங்கி இருக்கும். அவர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றி உணர்வு கொண்டவர்களாக இருக்க மாட்டார்

கள். தொடர்ந்து அவர்களை அணி திரட்டும் போதும், ஊக்கமளிக்கும் போதும் அவர்கள் சங்க உணர்வு பெறுகிறார்கள். ஆஷா தொழிலாளர் களை பொருத்தவரை ஆரம்ப சுகாதார நிலையம் தான் அவர்களது மையம். மேலிருந்து எடுக்கப் படும் பிரச்சாரங்களும் முன் முயற்சிகளும் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

ஆஷா தொழிலாளர்களின் இரண்டு வேலை நிறுத்தங்கள் அவர்களை அணிதிரட்டிக் கொள்ள உதவின. வெற்றிகரமாக நடத்தப்பட்ட வேலை நிறுத்தங்களும் கட்டமைக்கப்பட்ட விதத்திலான பிரச்சாரமும், நம் அமைப்பை மிகப்பெரிய அமைப்பாக வளர்க்க உதவின. நாம் முதலில் 13 மாவட்டங்களிலிருந்து, 100 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து வேலைகளை துவக்கினோம். போராட்ட இயக்கப் போக்கில் ஆஷா செயல்வீரர்கள் நம்பிக்கை பெற்றனர். அவர்கள் அமைப்பு வேலைகளில் கைதேர்ந்தவர் களாக வளர்ந்தனர். தொழிற்சங்க தலைவர்களின் பாத்திரம் விடாப்பிடியானதாக, ஜனநாயகப் பூர்வமானதாக, வெளிப்படைத் தன்மையுடன் இருப்பது மிகவும் அவசியமானது என்பதை நமது அனுபவம் காட்டுகிறது. அமைப் பினுடைய நன் மதிப்பும், தலைவர்களுடைய நன்மதிப்பும் ஆஷா திட்ட தொழிலாளர்களை நெருக்கமாக கொண்டு வர முக்கியமானவை ஆகும்.

முதலில் நாங்கள் ஆஷா தொழிலாளர்களின் கௌரவத்திற்கான போராட்டத்தை நடத்தினோம். மருத்துவர், மேலாளர், இதர அரசு ஊழியர்கள் எங்களிடம் தவறாக நடந்து கொண்டிருந்தார்கள். தொழிற்சங்கம் அமைத்ததற்காக எங்களை அச்சுறுத்தினார்கள். கோவிட் காலத்தில் உயிரை பணயம் வைத்து மிகப்பெரிய பங்காற்றினோம். ஆனால், பிரதமர் வெறும் உதட்டளவு வாய் சொல்லில் பேசினாரே ஒழிய எவ்வித வெகு மதியும் அளிக்க மறுத்துவிட்டார். தொழிற்சங்க இயக்கத்தின் நீண்ட கால கோரிக்கைகள் கண்டு கொள்ளப்படவேயில்லை. அரசாங்கத்தின் இந்த அலட்சியப் போக்கு அடுத்தடுத்த போராட்ட இயக்கங்களில் கோபமாக வெளிப்பட்டது. இது போன்ற அனுபவம் நாட்டின் பல்வேறு முனைக ளிலும் வெளிப்பட்டது. உத்தரப்பிரதேசம், டெல்லி, கர்நாடகா மற்றும் வேறு சில மாநிலங்க ளிலும் மிகப்பெரிய அணிதிரட்டல் நடைபெற்றது.

இப்போதைய 32 நாள் வேலை நிறுத்தம் என்பது, மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. வேலை நிறுத்தம் மிகவும் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டது. முதலமைச்சர், சுகாதாரத்துறை அமைச்சர், சுகாதாரத்துறை செயலாளர் ஆகியோருக்கு முன்னதாகவே கோரிக்கை பட்டியல் கொடுக்கப்பட்டது. மிகப் பரந்த பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஏஐசிசிடியு வும் சிஐடியு வும் இணைந்து கூட்டுக் குழு உருவாக்கப்பட்டது. ஏஐடியுசி யின் தலைமை மதிப்பிழந்து போயிருந்த காரணத்தால் அவர்கள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. ஆஷா தொழிலாளர்களின் அனைத்துப் பிரச்சனை களையும் கோரிக்கையாக தயாராக வடிவமைத் திருந்த காரணத்தால் ஆஷா தொழிலாளர்கள் முழு வீச்சில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதற்கு முன்னர் வேலை நிறுத்தம் அறிவித்த போது, உயர்நீதிமன்றம் தலையிட்டு நியாயமான கோரிக்கைகளை பரிசீலிக்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவிட்ட காரணத்தால் வேலை நிறுத்தத்தை துவங்க முடியவில்லை. கூடவே உயர் நீதிமன்றம் ஆஷா தொழிலாளர்களின் கோவிட் கால வேலையைப் பாராட்டி அப்போது பதிவும் செய்திருந்தது.

வேலை நிறுத்தம் துவங்கி ஒரு வார காலத்திற்குள் மாநிலம் முழுவதும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செய்தி பரவியது. வேலை நிறுத்தம் சூடு பிடித்ததால் எல்லா கிராமப்புற மையங்களும் செயல்பட முடியாமல் போனது. தடுப்பூசி பணி நிறுத்தப்பட்டது. கிராமப்புற மருத்துவமனைகள் பாதிக்கப்பட்டன. ஆரம்ப சுகாதார நிலையம் முன்பும் மாவட்டத் தலைமை மருத்துவமனை முன்பும் தொடர் போராட்டங்கள் கட்டமைக்கப் பட்டன. அதன் பின்பு தலைநகர் பாட்னாவில் ஆஷா தொழிலாளர்களும் உதவியாளர்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு மேடையில் தொழிற்சங்க தலைவர்களும் முற்போக்கு பெண்கள் கழக தலைவர்களும் 8 சட்டமன்ற உறுப்பினர்களும் உரை நிகழ்த்தினர். இடப் பற்றாக்குறை காரணமாக ஆஷா தொழிலாளர்கள் வீதிகளிலும் அருகாமையில் ரயில் நிலையத் திலும் குழுமி இருந்தனர். இந்த வேலை நிறுத்தம் முழுக்க முழுக்க பெண்களாலேயே கட்டமைக்கப் பட்டது என்பது சிறப்பான ஒன்றாகும்.

ஆஷா தொழிலாளர்களின் வேலை பறிபோகும் என அரசாங்கம் அறிவித்தபோதும் கூட, திட்டத் தொழிலாளர்கள், மருத்துவர் இதர அரசு ஊழியர்களிடம் தன்மையாகவே நடந்து

கொண்டனர். பல ஆரம்ப சுகாதார நிலையங்களில் காவல்துறை, ஒரு டஜன் முதல் தகவல் அறிக்கைகளை பதிவு செய்து அச்சுறுத்தியது. இதனால் வேலை நிறுத்தம் பெரிய அரசியல் நிகழ்வாக மாறியது.

அதன் பிறகு அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தை துவங்கியது. 'வெகுமதி' என்பதற்கு பதிலாக 'மதிப்பூதியம்' பெறும் ஊழியர்கள் என்ற கோரிக்கையும், ஊதிய உயர்வு கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்க மறுத்தது. இந்த சூழலில் போராட்டத்தை தீவிரப்படுத்துமாறு ஆஷா தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மருத்துவமனைகள் செயல்பாட்டை இழக்கத் துவங்கியது. இதற்கிடையே வறுமையை விளக்கும் வகையில் தட்டு தட்டும் போராட்டம் பிரபலமாக நடத்தப்பட்டது. தொழிலாளர்கள் கோரிக்கைகளை மெஹந்தி கொண்டு கைகளில் எழுதி சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு படம் எடுத்து அனுப்பி வைத்தார்கள். தினமும் வாய்ஸ் மெசேஜ் மூலம் மாவட்ட தலைவர்களுக்கு தலைமையகத்திலிருந்து செய்தி அனுப்பப் பட்டது. இது நன்கு அமைப்பாக்கப்பட்ட விதத்தில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உதவியது.

இப்படி இருக்கையில், போராட்டம் விலக்கிக் கொள்ளப் பட்டால் பிரச்சனைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம் என அரசாங்கத் தரப்பு செய்தி அனுப்பியது. செய்தியை நிராகரித்த போராட்டக்காரர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்தனர். இது அரசாங்கத்துக்கு வலுவான செய்தியை சொல்லியது. பிறகு சுகாதாரத்துறை செயலாளர் ஏற்பாடு செய்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டோம். கூட்டத்தில் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு இறுதி சுற்று பேச்சு வார்த்தை சுகாதாரத்துறை அமைச்சரும் துணை முதல்வருமான தேஜஸ்வி யாதவுடன் ஏற்பாடு செய்யப்பட்டது. போராட்டம் வெற்றி அடைந்தது. தொழிலாளர்களும் உதவியாளர்களும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாவட்ட மருத்துவமனைகளிலும் பெரிய அளவில் வெற்றியைக் கொண்டாடினர்.

இந்தப் போராட்டத்தின் விளைவாக அரை அரசு ஊழியர்களாக திட்டத் தொழிலாளர்கள் மாறியதோடு, ஊதியத்தில் ரூபாய் 1500 உயர்வும் கிடைத்தது. மற்ற சில கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இகக(மாலெ) சட்டமன்ற உறுப்பினர்களும் அயர்லா தலைவர்களும் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளனர். போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி மத்திய தொழிற்சங்க கூட்டு மேடை அறிக்கை வெளியிட்டிருந்தது.

**'வெகுமதி' என்பதற்கு பதிலாக 'மதிப்பூதியம்' பெறும் ஊழியர்கள் என்ற கோரிக்கையும், ஊதிய உயர்வு கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்க மறுத்தது. இந்த சூழலில் போராட்டத்தை தீவிரப்படுத்துமாறு ஆஷா தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.**

இந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக ஏஐசிசிடியு உடனும் அரசு ஊழியர் கூட்டமைப் புடனும் இணைக்கப்பட்ட பீகார் மாநில ஆஷா தொழிலாளர் சங்கம் நன்கு பிரசித்திப் பெற்றுள்ளது. நம் அமைப்பின் தலைவர்களும் ஆஷா ஊழியர்கள் மத்தியில் பிரபலம் அடைந் துள்ளனர்.

இந்தப் போராட்டத்தினூடே நமது சங்கம் பல மாவட்டங்களிலும் பல ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் விரிவடைந்துள்ளது. இந்தப் போராட்டத்தின் மூலம் நன்மதிப்பு கிடைத் துள்ளது. இது நாம் ஆஷா தொழிலாளர்களின் அகில இந்திய கூட்டமைப்பின் மாநாட்டை பாட்னாவில் நடத்துவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இந்த போராட் டத்தின் கடைசி முழக்கமாக வந்த செய்தி 'பீகாரில் நாம் போராட்டக் களத்தில் வென்றிருக் கிறோம். அடுத்து நாம் ஒன்றிய மோடி அரசாங்கத்தை கெரோ செய்ய வேண்டும்' ஏனென்றால் முக்கிய திட்டப் பணிகளுக்கான வேலையளிப்பவராக மத்திய அரசாங்கமே உள்ளது. பல வகை திட்டத் தொழிலாளர்களின் மோசமான பணி நிலைமைகளுக்கு மத்திய அரசாங்கமே காரணம். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கான போராட் டத்தை தீவிரப்படுத்த மாநாட்டு மேடையில் இருந்து அறைகூவல் விடுக்கப்பட வேண்டும். மாநாடு திட்டத் தொழிலாளர் தொழிற்சங்க இயக்கத்தில் ஒரு வரலாற்றை படைப்பதாக அமையும். செப்டம்பர் 9–10 தேதிகளில் நடைபெறும் இந்த மாநாட்டில் நாடு முழுவதுமிருந்து 500 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். ❑

## நாங்குநேரி கொடூரம்: தொடரக் கூடாது
## குற்றச் செயலுக்கு காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்!
## குற்றம் செய்தது மாணவர்கள் மட்டுமே அல்ல!

### அரசு அறிவித்துள்ள சந்துரு ஆணையம் இதற்கு தீர்வுகாண வேண்டும்!

பள்ளியில் சாதிய காழ்ப்புணர்ச்சியோடு செயல்பட்ட மாணவர் சிலர், அதன் தொடர்ச்சியாக தலித் மாணவன் சின்னத்துரை வீடு புகுந்து கொடூர தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். குற்றமிழைத்தவர்கள், சின்னத்துரையோடு படிக்கும் உயர் சாதி எண்ணத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள்!

இது சொல்லொணா கடும் அதிர்ச்சி அளிக்கிறது. சின்னத்துரை தங்கை, சந்திரா செல்வியும் கொடூர காயங்கள் அடைந்துள்ளார். இந்தச் சம்பவம், அவர்களது தாத்தா உயிரையும் பறித்துள்ளது.

தாக்கப்பட்டவரும் தாக்கியவர்களும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள். இந்தப் பள்ளியில் சக மாணவர்களால் சின்னத்துரை மீது தொடர்ந்து நடந்து வந்த சாதி ரீதியான கொடுமைகள் இதுவரை அந்த பள்ளி நிர்வாகத்திற்கு தெரியவில்லை என்பது உண்மையா என்ற கேள்வி எழுகிறது. அப்படியே தெரியாமலிருந்தது உண்மையென்றால் பள்ளி நிர்வாகம் மாணவர்களது சகோதரத்துவ பழக்கம், நல்லிணக்கம் கொண்ட கல்விச் சூழல் பற்றி கவலை கொள்ளவில்லை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. அல்லது சாதிபாகுபாடு இல்லாத கல்விக் கூடமாக அது இல்லை என்பது தெளிவாகிறது. இத்தகைய சூழலே இத்தகைய கொடூரக் குற்றங்களை அந்த மாணவர்கள் செய்யத் தூண்டுகோலாக இருந்துள்ளது.

குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் குற்றவாளிகள் அந்த மாணவர்கள் மட்டுமல்ல. சாதி அரசியலை வளர்த்து கட்சி அரசியலாக மாற்றிய அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி ஆட்சி நடத்தும் ஆட்சியாளர்கள் காரணம். முக்கிய அரசியல் கட்சிகள், அரசு நிர்வாகம், காவல்துறை, கல்வித்துறை உள்ளிட்ட அனைத்திலும் சாதி பாகுபாடு, சாதி ஆதிக்கம் கொடிகட்டி பறப்பதுதான் காரணம்.

இந்தச் சூழலை உருவாக்கியவர்களும் குற்றவாளிகளே! சமூகத்தின் அனைத்து பகுதிகளிலும் புரையோடிப்போயுள்ள இந்த அழுகிப்போன சூழல் நாற்றங்கால்களான பள்ளிகளிலும் வீடுகளிலும் கோலோச்சுகிறது. தென்காசியில் பட்டியலின பள்ளிப் பிள்ளைகளுக்கு தின்பண்டம் விற்பனை செய்ய மறுப்பதிலிருந்து தொடங்கி பள்ளிக் கழிப்பறைகளை தலித் மாணவர்களை சுத்தம் செய்யச் சொல்வது, சத்துணவு திட்டத்தில் தலித் சமையலர் செய்த உணவை சாப்பிட மறுக்கச் செய்வது போன்ற குற்றங்களும் நடப்பது தொடர்கதைகளாக உள்ளன. இது போன்ற குற்றங்கள் வெளிச்சத்துக்கு வரும்போது சில மேம்போக்கான நடவடிக்கைகளோடு முடிந்து போகின்றன. இது போன்ற குற்றங்களை முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் அரசியல் கட்சிகள் மேற்கொள்வதில்லை. மாறாக சாதியாதிக்கத்தை ஓட்டுக்காக ஊட்டி வளர்க்கிறார்கள். திசையன்விளை முத்தையா கொலையானது சாதியாதிக்கக் கொலை என்பதில் இருந்து திசை திருப்பப்பட்டுவிட்டுள்ளது. சாதியாதிக்கக் கொலையை மாற்றி எழுதியது மட்டுமின்றி பறையர்– அருந்ததியர் பாகுப்பாட்டை தூண்டும் வகையில், ஆட்சியாளர்களின் ஆசைக்கேற்ப திரைக் கதை, வசனம் எழுதியிருக்கிறார்கள் கை தேர்ந்த காவல்துறையினர். அருந்ததியர் முத்தையா கொலையில் சம்பந்தமில்லா பறையர் இளைஞர்களுக்கு இப்போது குண்டாஸ் வேறு.

சாதிப் பெருமிதச் சூழல் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும். சாதிப் பெருமிதம் குடிபுகுந்துவிட்டாலே தீண்டாமையும் ஆழக் குடிபுகுந்துவிடும். இதை நிரூபிப்பதாகவே, திசையன்விளை, நாங்குநேரி சம்பவங்கள் நடந்த சில நாட்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் நடந்த ஒரு சம்பவம் உள்ளது. ஒரே பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் இடையே நடந்த சண்டையை தடுத்து நிறுத்த முயற்சித்த சக தலித் மாணவன் படுமோசமாக தாக்கப்பட்டுள்ளார்! சகோதரத்துவ உணர்வுடன் செயல்பட்ட ஒரு மாணவர் தலித் என்பதால் தாக்கப்பட்டிருப்பது எவ்வளவு பெரிய கொடுமை?

வீடு புகுந்து தாக்கிய, மாணவர்கள் திமுக, மதிமுக தலைவர்கள் வீட்டுப்பிள்ளைகள் என்ற

தகவல் உள்ளது. இல்லை ஒருவர் பாஜக வீட்டுப் பிள்ளை என்றும் சொல்லப்படுகிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட நிலவரத்தை இந்த தகவல் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. மேலும் மேலும் கல்விக் கூடங்கள், குற்றக் கூடங்களாக மாறி வருவதும் கல்விச் சூழல் குற்றமிழைக்கும் சூழலை உருவாக்கி வருகிறது என்பதற்கு இந்த சம்பவம் நேற்றைய உதாரணம். இந்த சூழல்தான் கனியாமூர் பள்ளி குற்றவாளிகளை (நீதிபதிகள் சிலரும் சேர்ந்து) ஓராண்டாக பாதுகாக்கிறது. வேங்கைவயலில் தலித்துகள் குடிக்கும் தண்ணீரில் மலம் கலந்த குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படாததற்கு காரணமாகிறது.

இதற்கு ஆட்சியாளர், அரசு நிர்வாகம் கூட்டுப் பொறுப்பேற்க வேண்டும். தமிழ்நாட்டில் இத்தகைய சூழல் இருந்து கொண்டிருப்பது பெரியார், சிங்காரவேலர், டாக்டர் அம்பேத்கர் மரபுக்கு இழைக்கும் மாபெரும் துரோகம்!

★ சட்டப்பேரவை தலைவர், அமைச்சர்கள், அரசியல் கட்சியினர், அதிகாரிகள், உயிருக்குப் போராடிய நிலையிலிருந்த சிறுவர்களை சென்று பார்த்துள்ளனர். தமிழ்நாடு அரசு உயர் சிறப்பு மருத்துவம் வழங்கி வருகிறது. ஆனால் இது போதுமானதல்ல. கல்விக்கூடங்களில் இத்தகைய கொடூரங்கள் நிகழாமலிருக்க அரசு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

★ உயிரிழந்த முதியவரின் குடும்பத்துக்கு அரசு ஒரு கோடி இழப்பீடு வழங்கிட வேண்டும்.

★ சின்னத்துரை அவரது தங்கை இருவரும் அவர்கள் விரும்பும் வரை படிக்கும் செலவு முழுவதையும்(பள்ளிக் கல்வி அமைச்சருக்குப் பதிலாக) அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

★ கல்வி நிறுவனமும் பொறுப்பாக்கப்பட்டு உரியவாறு தண்டிக்கப்பட வேண்டும்.

★ கைது செய்யப்பட்டவர்கள் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டார்கள் என்பதை விடவும் சாதி உணர்வு எண்ணத்திலிருந்து மீட்கப்பட்டார்கள்; சகோதரத்துவ எண்ணம் அவர்களிடம் விதைக்கப் பட்டது என்ற நிலையைக் கொண்டுவர வேண்டும்.

★ அனைத்துக்கும் மேலாக, கல்விக் கூடங்களிலிருந்து சாதிப் பெருமிதமும் சாதியும் வெளியேற்றப்பட வேண்டும்; சகோதரத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். இதற்கு அரசும் அரசியல் கட்சிகளும் பொறுப்பு.

★ திசையன்விளை முத்தையா கொலையில் உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். வன்கொடுமைச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் பொய்யாக கைது செய்யப்பட்டுள்ள பட்டியலின இளைஞர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

★ தமிழ்நாடு அரசு இதுபோன்ற சம்பவங்கள் இனியும் நிகழாமலிருக்க மேனாள் நீதிபதி சந்துருவைக் கொண்டு ஒரு நபர் ஆணையத்தை அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த ஆணையத் துக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. வழக்க மான ஆணையமாக இல்லாமல், நாற்றங் கால்கள், விளையும் நிலங்களான பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்களிலிருந்தும் சாதி மனநிலை, சாதிப் பெருமிதம், சாதிப்பாகுபாடு ஒழிய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பரிந்துரைக்க வேண்டும். அது ஒரு பண்பாட்டு புரட்சியாக மக்கள் இயக்கமாக மாறுவதற்கு வழிகோல வேண்டும்.

தீண்டாமை மனித நேயமற்றச்செயல் தீண்டாமை பெருங்குற்றம் என அச்சடிக்கப் பட்டிருக்கும் பல கோடிக்கணக்கானபாடநூல்கள் புழங்கும் தமிழகப் பள்ளிகளில் தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டியிருப்பது வரலாற்று பெருந்துயரம்.

உத்திரப்பிரதேசத்தில் மதவெறி வெறுப்பு, ஆரம்பப் பள்ளியில் பயிலும் இளம் உள்ளங் களை நஞ்சாக்கியுள்ளது என்றால், தமிழ்நாட்டில் சாதி நஞ்சு பிஞ்சு உள்ளங்களை நஞ்சாக்கி விட்டிருக்கிறது. இந்தியாவை துண்டாடி, எரித்துக் கொண்டிருக்கும் மத வெறியை எதிர்த்துப் போராடி வரும் தமிழ்நாடு, அதே அளவுக்கு சாதி வெறியையும் சாதியையும் அப்புறப்படுத்தப் போராட முன்வரவேண்டும். இதற்கு வழிவகுக்கும் விதமாக சந்துரு ஆணை யத்தின் பரிந்துரைகள் அமைய வேண்டும்.

★ ஆணையம், இடது, முற்போக்கு கட்சிகள், தலித் கட்சிகள், அமைப்புகள், கல்வியாளர்கள், ஆளுமைகள், அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து ஆக்கபூர்வமான ஆலோ சனைகளைப் பெற்று பரிந்துரைகளை வடிவமைக்க வேண்டும். வருங்காலத்தின் வித்துகள், இளம் தலைமுறை மாணவர், இளைஞர்கள் சாதிப் பற்று நீங்கிய சமுதாயமாக மாறுவதற்குரிய வழிமுறைகளை வகுத்து தர வேண்டுமென்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) வலியுறுத்துகிறது.

பகத்சிங், பெரியார், சிங்காரவேலர், அம்பேத்கர் கருத்துகள் கல்வி நிறுவனங்களில் ஆழ வேரூன்றச் செய்ய வேண்டும். ❑

# புதிய முப்பெரும் சட்ட மசோதாக்கள்: புதிய மொந்தையில் விஷம் கலந்த பழைய கள்

ரமேஷ் கணபதி

இந்திய தண்டனைச் சட்டம் (IPC) 1860, குற்றவியில் நடைமுறைச் சட்டம் (Cr.PC)1898, இந்திய சாட்சிய சட்டம் (IEA) 1872 ஆகிய முப்பெரும் சட்டங்களும் ஆங்கிலேயர்கள் காலத்தில் இயற்றப்பட்டவை, அதனால் அவைகள் மாற்றப்பட வேண்டும் என்று காரணம் சொல்லி புதிதாக மூன்று சட்ட மதோதாக்களை கடந்த 11.8.2023 அன்று நாடாளுமன்றத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தாக்கல் செய்தார். ஆங்கிலேயர் காலத்து பழைய சட்டங்களை புதிதாக காலத்திற்கு ஏற்ற சட்டமாக கொண்டு வரவே இந்த புதிய மசோதாக்கள் என்று அமித்ஷாவும் ஆர்எஸ்எஸ் சங்கிகளும் கூறுகிறார்கள். இந்த சட்ட மசோதாக்களை தாக்கல் செய்தபோது, ‘இந்த மூன்று சட்டங்களும் ஆங்கிலேயர் ஆட்சியைப் பலப்படுத்தவும் பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டது, அவர்களுடைய நோக்கம் தண்டிப்பதுதானேயொழிய நீதி வழங்குவது அல்ல, இந்த இரண்டு அடிப்படை விசயங் களிலும் நாம் மாற்றங்கள் கொண்டு வரப் போகிறோம்’ என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறினார். இது ஆடு நனையிதுன்னு ஓநாய் அழுத கதைதான். விடுதலைப் போராட் டத்தில் பங்கெடுக்காத, மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து ஆங்கிலேயர்களுக்கு சேவகம் செய்த சாவர்க்கர் வாரிசுகள் ஆங்கிலேயர் காலத்து சட்டத்தினை மாற்றப் போவதாகச் சொல் கிறார்கள். இவர்களின் நோக்கம், இருக்கின்ற ஜனநாயக உரிமைகளை முற்றிலும் ஒழித்து விட்டு சர்வாதிகாரத்தை சட்டப்படியாக மாற்றுவதேயாகும்.

## தேசத் துரோகச் சட்டம்

இந்திய தண்டனைச் சட்டத்தில் தேசத் துரோகச் சட்டப் பிரிவு 124ஏ நீக்கப்பட்டுவிட்டது என்று அமித்ஷா கூறுகிறார். உண்மையில், சட்டப்பிரிவு 124ஏ-ஐ நீக்கிவிட்டு, அதில் இருந்த கொடூர அம்சங்களை பிரிவு 150ல் கொண்டு வந்துள்ளார்கள். அதில் இருந்த ‘தேசத் துரோகம்’ என்பதை மாற்றிவிட்டு, அதற்குப் பதிலாக, ‘பிரிவினைவாதம், ஆயுத கிளர்ச்சி, நாசகாரச் செயல்கள் மற்றும் இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து விளைவித்தல்’ என்று சேர்க்கப் பட்டுள்ளது. எதிர்ப்புக் குரலே சுத்தமாக இருக்கக் கூடாது என்பதுதான் இதன் நோக்கம். அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு, திட்டங்களுக்கு எதிராகப் பேசுபவர்களை, இஸ்லாமியர்களை, கிறிஸ்தவர்களை, பழங்குடி மக்களை, பட்டி யலின மக்களை நேரடியாகவே நாட்டின் இறை யாண்மைக்கு, ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவித்தார்கள் என்று எளிதாகக் கைது செய்து சிறையிலடைக்கவே இந்த மாற்றுச் சொல்லாடல்.

## பெண்களுக்கு பாதுகாப்பு

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை புதிய சட்டங்களின் முன் அத்தியாயங்களில் கொண்டு வந்துள்ளோம், புதிய சட்டங்கள் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் என்று பெருமை பேசுகிறார்கள். திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஒரு பெண்ணுடன் உடலுறவு கொண்டால் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று கூறும் புதிய மசோதா, 18 வயது பூர்த்தி யடைந்த சொந்த மனைவியுடன் (கட்டாய) உடலுறவு கொண்டால் அது பாலியல் வன் புணர்வு ஆகாது என்று கூறுகிறது. மதம் கடந்து, சாதி மறுத்து காதலிப்பதை, திருமணம் செய்து கொள்வதைத் தடுக்கவும் மனைவி என்ற ஒரே காரணத்திற்காக கணவனின் வன்முறைச் செயல்களை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்கிற பெண்களை ஒரு பொருளாக, கணவனின் உடமையாகப் பார்க்கும் சங்கிகளின் மனு தர்மத்தை சட்டமாக்கவுமே இந்த மாற்றங்கள். பெண்களுக்கு எதிரான குற்றத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாக்குமூலத்தை கட்டாயமாக வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அது எந்த அளவிற்கு காவல் துறையால், ஆட்சியாளர்களால் நடை முறைப்படுத்தப்படும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வெறுமனே தண்டனையின் அளவைக் கூட்டுவதன் மூலம் குற்றங்கள் குறைந்து விடுமா?.

## குழப்பும் சட்டப் பிரிவுகள் ஒடுக்கும் நடைமுறைகள்

*ஏற்கனவே கூறியதுபோல், தேசத் துரோகச் சட்டப் பிரிவு 124ஏ நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பிரிவு 150 சேர்க்கப்பட்டுள்ளது. அதேபோல், இந்திய தண்டனைச் சட்டத்தில் மொத்தமுள்ள 511 பிரிவுகள் 356 ஆகக் குறைக்கப்படுகிறது. அதில் 175 பிரிவுகள் மாற்றப்படுகின்றன. 8 புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு, 22 பிரிவுகள் நீக்கப்படுகின்றன. உதாரணமாக இந்திய தண்டனைச் சட்டத்தில் கொலைக் குற்றத்திற்கான பிரிவு 302. அதை 101 மாற்றியிருக்கிறார்கள். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள 533 பிரிவுகளில் 160 பிரிவுகள் மாற்றப்படுகின்றன. 9 புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டு 9 பழைய பிரிவுகள் நீக்கப்படுகின்றன. இந்திய சாட்சிய சட்டத்தில் உள்ள 167 பிரிவுகள், 170 ஆகிறது. 23 பிரிவுகள் மாற்றப்படுகின்றன. 1 புதிய பிரிவு சேர்க்கப்பட்டு 5 பிரிவுகள் நீக்கப்படுகின்றன. இதன் மூலம் இதுவரை இருந்த சட்டப்பிரிவுகள், அதன் விளக்கங்கள், அதன் அடிப்படையிலான நீதிமன்றத் தீர்ப்புகள் அனைத்தும் பயனற்றுப் போகும்.*

*பாரதிய நியாய சன்ஹிதாவில் அதாவது இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிவு 109 அமைப்பாக்கப்பட்ட குற்றங்கள், பயங்கரவாதச் செயல்கள் பற்றிக் கூறுகிறது. மிரட்டியோ, அச்சுறுத்தியோ, சட்டத்திற்குப் புறம்பான வழிகளிலோ வன்முறையைப் பயன்படுத்தி பயனடையும் தனி நபர் அல்லது குழு செய்யும் குற்றங்கள் பற்றிப் பேசுகிறது. அந்த அமைப்பாக்கப்பட்ட குற்றத்திற்கு உதவுவது, சதி செய்வது, அணிதிரட்டுவது, ஆதரவளிப்பது அல்லது தயாரிப்புச் செயல்களில் ஈடுபடுவது எல்லாம் இந்த குற்றத்தில் அடங்கும் என தெளிவில்லாமல் பொத்தாம் பொதுவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் யாரை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் கைது செய்து சிறையிலடைக்கலாம் ஊபா (*UAPA*) சட்டத்தைப் பயன்படுத்தாமலேயே. இதோடு கூடவே பொதுமக்களுக்கு பாதுகாப்பின்மையை ஏற்படுத்தும் 'சிறிய அமைப்பாக்கப்பட்ட குற்றங்கள்' (*Petty Organised Crime*) என்று புதிதாகச் சேர்த்துள்ளார்கள். இனி சங்கிகளை எதிர்ப்பவர்கள் எளிதாக சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளப்படுவார்கள்.*

*ஒவ்வொரு குற்றமும் தடயவியல் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்கிறது புதிய மசோதா. இந்தியாவில் இருக்கிற தடயவியல் அமைப்பு அதற்கேற்ற தகுதி, வசதி வாய்ப்புகளுடன் உள்ளதா? என்பது ஒரு புறம் இருக்கட்டும். வெளிப்படையாக, தாங்கள் செய்யும் குற்றங்களை வீடியோ எடுத்து வெளியிட்டுக் கொண்டிருப்பவர்கள் மீது இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துவிட்டார்கள்? மணிப்பூரில் இரண்டு பழங்குடிப் பெண்களை ஆடையில்லாமல் அணிவகுப்பு நடத்தியவர்கள் மீது தற்போது இருக்கக் கூடிய சட்டப் பிரிவுகள் படியேகூட நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக குற்றவாளிகளான சங்கிகளைப் பாதுகாத்தன பாஜக அரசும் காவல்துறையும். மல்யுத்த வீராங்கனைகளின் வெளிப்படையான வாக்குமூலங்களை கண்டு கொள்ளாமல் குற்றவாளியான பிரிஜ்பூஷனை காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று இப்போது இருப்பதை, நீதிமன்றத்தின் அனுமதியுடன் இன்னொரு 90 நாட்களுக்கு மேல் 120 நாட்களுக்கும் அதற்கு மேலும் நீட்டித்துக் கொள்ளலாம் என்கிறது புதிய மசோதா. அடுத்து கைது செய்யப்பட்ட ஒருவரை தற்போது 15 நாட்கள் வரை மட்டுமே காவலில் வைக்கும் நடைமுறையை மாற்றி 60 முதல் 90 நாட்கள் வரை காவலில் வைக்க வழி செய்கிறது. இப்போதே விசாரணையே இன்றி பல ஆண்டுகளாக சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள் பலர்.*

### இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு

*மேலும் ஆங்கிலேயர் காலத்து சட்டங்களை மாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு சட்டங்களின் பெயர்களை சமஸ்கிருதத்திலும் இந்தியிலும் மாற்றியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, 'இந்தியா' என்பதை பாரத் அல்லது பாரதிய என்று மாற்றியுள்ளார்கள். இந்திய தண்டனை சட்டத்தை பாரதிய நியாய சன்ஹிதா என்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தை இந்திய நகரிக் சுரக்ஷ சன்ஹிதா என்றும் இந்திய சாட்சிய சட்டத்தை இந்திய சக்ஷயா என்றும் பெயரிட்டுள்ளார்கள். எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணி மோடி–ஷாவுக்கு எரிச்சல் ஊட்டுகிறது போலும்.*

*உண்மையில், இந்தியாவின் பெயரை பாரத் என்றும், ஒரே நாடு, ஒரே மொழி, இந்தி மொழி என்றும் மாற்றும் நாட்டின் பன்முகத் தன்மையை ஒழித்துக் கட்டும் சங்கிகள் திட்டம்தான் இதன் பின்னால் உள்ளது. இந்தியை எல்லா மாநிலங்களிலும் பயிற்றுவிக்க வேண்டும் என்று அமித்ஷா தொடர்ந்து கூறி வருகிறார். பன்மொழி, பன்முகத் தன்மை கொண்ட இந்தியா*

வில் திட்டமிட்டு இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் மட்டுமே எல்லாத் திட்டங்களுக்கும் சட்டங் களுக்கும் பெயர்கள் மோடி அரசால் மாற்றப் பட்டு வருகிறது.

### நிர்மூலமாக்கப்படும் நீதித்துறை

இந்த மசோதாக்கள் சட்டமாக்கப்பட்டால், பாசிச சர்வாதிகாரம் தலைவிரித்தாடும். நீதிபதிகள் ஆட்சியாளர்களின் கைப் பொம்மைகளாக (இப்போதே அப்படித்தான் இருக்கிறது என்றாலும்) முற்றிலுமாக சட்டப்படியே மாற்றப் பட்டுவிடுவர். நீதிக்காகவும் ஜனநாயகத்திற் காகவும் குரல் கொடுக்கும் வழக்கறிஞர் சமுதாயத்தை வலுவிழக்கச் செய்வதே இச் சட்டத்தின் அடிப்படை நோக்கம். இந்த புதிய மசோதாக்கள் காவல்துறைக்கு அதிக அதிகாரங் களை வழங்குகிறது. எந்த காவல் நிலையத்திலும் மக்கள் புகார் அளிக்கலாம் என்று புதிய சட்டத்தில் சொல்லப்பட்டுள்ளதாகக் கூறுகி றார்கள். இது ஏற்கனவே உள்ளது தான் என்றாலும் எந்தக் காவல் நிலையத்திலும் இதை கடைபிடிப்பது இல்லை. இனி சங்கிகள் தங்களுக்கு எதிரானவர்கள் மீது பொய்ப் புகார் கொடுப்பதற்கு இதைப் பயன்படுத்துவார்கள்.

ஏற்கனவே நேரடி நீதிமன்ற நடவடிக் கைக்குப் பதிலாக மெய்நிகர் (காணொலி) நீதிமன்றம் என்பதும் வழக்குகளை கணினி மூலம் இ-பைலிங் முறையில் தாக்கல் செய்ய வேண்டும் என்பதும் அமலுக்கு வந்து கொண்டிருக்கின்றன. பெரும்பாலான வழக்கறிஞர்களுக்கு அதற்கான வசதி வாய்ப்புகள் கிடையாது. இனி கணினி மையங்களின் கட்டுப்பாட்டிற்குள் வழக்கறிஞர் கள் வந்துவிடும் நிலை உருவாகும். விசாரணை, குறுக்கு விசாரணையும் மெய்நிகர்(காணொலி) வாயிலாக செய்யப்படும் என்கிறபோது நீதிமன்றங்கள் வெறும் கட்டடங்களாக மாறும். நேரடியான குறுக்கு விசாரணை இல்லாதபோது, சாட்சிகளை தங்கள் வசதிக்கேற்ப சொல்ல வைப்பார்கள் செல்வாக்கு உள்ளவர்களும் காவல்துறையும். இனி வழக்கறிஞர்கள் ஒன்று சேர்வதும் அணிதிரள்வதும் தடுக்கப்படும். இதனால் மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்படும். இந்திய அரசியல மைப்பில் முக்கியமாக உள்ள நீதித்துறை என்கிற மூன்றாம் தூண் பிடுங்கி எறியப்பட்டு விடும். தலைமைத் தேர்தல் ஆணையரை தங்கள் விருப்பம் போல் நியமனம் செய்திட, உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக ஒரு சட்டத் திருத்த மசோதாவைத் தாக்கல் செய்து தலைமை தேர்தல் ஆணையரை தேர்வு செய்ய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தேவையில்லை என்கிறார்கள். இவர்கள்தான் காலத்திற்கு ஏற்ப, மக்களுக்காக சட்டங்களை மாற்றுகிறார்களாம்.

### தூக்கி வீசப்பட்ட சட்ட நடைமுறைகள்

இந்தச் சட்ட மசோதாக்களைத் தாக்கல் செய்வதற்கு முன்பு நீதிபதிகளையோ, வழக்கறி ஞர்களையோ கலந்தாலோசிக்கவில்லை. பொது மக்களிடம் கருத்துக் கேட்பு நடத்தப்பட வில்லை. வழக்கத்திற்கு மாறாக, சட்ட அமைச்ச ருக்குப் பதிலாக உள்துறை அமைச்சர் சட்ட மசோதாக்களைத் தாக்கல் செய்தார். 18 மாநிலங்கள், 6 ஒன்றியப் பிரதேசங்கள், 16 உயர் நீதிமன்றங்கள், உச்சநீதிமன்றம் இந்த புதிய சட்டங்களுக்கு பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக அமித்ஷா கூறுகிறார். ஆனால், அந்த பரிந்துரை விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இப்போது பாஜக நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையில் உள்ள நாடாளுமன்ற நிலைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் குழு மூன்று மாதங்களுக்குள் விவாதங்கள் நடத்தி அறிக்கை தாக்கல் செய்வார்களாம். வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக இவற்றைச் சட்டங்களாக ஆக்கி விட்டால், தேர்தலையே கூட தங்கள் விருப்பம் போல் நடத்தி மீண்டும் ஆட்சியைப் பிடித்து விடும் நோக்கத்துடன் இந்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டங்கள் ‘அரசியலமைப்புச் சட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் நீதியை நிலை நாட்டும் என்றும் இச் சட்டங்கள் இந்திய ஆன்மாவுடன் இருக்கும் என்றும் அமித்ஷா கூறுகிறார். அமித்ஷா கூறும் இந்திய ஆன்மா என்பது இந்துத்துவ ஆன்மா என்பதை, அடுத்து இவர்கள் கை வைக்கப்போவது இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தை என்பதை சொல்லத் தேவையில்லை. ஒரு விசயத்தை யார் கொண்டு வருகிறார்கள் என்பதைக் கொண்டே அதன் அடிப்படை நோக்கம் பார்க்கப்பட வேண்டும்.

மூன்று விவசாயச் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகளும், அவர்களுடன் இணைந்து தொழி லாளர்களும் இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளும் நடத்திய பெரும் போராட்டத்தின் மூலம் அவற்றைத் திரும்பப் பெற்றது மோடி அரசு. அதே போல இந்த மூன்று சட்டங்களுக்கு எதிராக வழக்கறிஞர்கள், சட்டத் துறையில் பணிபுரிபவர்கள் மட்டுமின்றி எல்லா தரப்பு மக்களும் போராடியாக வேண்டியது காலத்தின் கட்டாயம். ❑

# தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம் 2023ஐ உடனே திரும்பப்பெறுக !

## அ.சந்திரமோகன்

பரந்தூர் விமானநிலையம், காட்டுப்பள்ளி துறைமுகம், என்எல்சி சுரங்கங்கள், சிப்காட் தொழிற்சாலை வளாகங்கள், எட்டுவழிச் சாலை எனத் தமிழ்நாட்டில் பல்வேறு கார்ப்பரேட் திட்டங்களுக்காக விவசாயிகளின் நிலங்கள் கையகப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக விவசாயிகள், மீனவர்கள், பொது மக்கள் வலுவான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்திக் கொண்டுவரும் பின்னணியில், கடந்த ஏப்ரல் 21, 2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட "தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம் 2023" (TamilNadu Land Consolidation (for Special Projects) Act 2023) என்ற விவசாயிகள் விரோத, சுற்றுச்சூழல் விரோத மசோதா சட்டமன்றத்தில் விவாதங்கள் இல்லாமல் நிறைவேறியது மட்டுமல்லாமல், தற்போது தமிழ்நாடு ஆளுநர் கையெழுத்தும் பெற்று அதிகாரமிக்க சட்டமாகியுள்ளது.

நீட் விலக்கு மசோதா உள்ளிட்ட பல்வேறு சட்ட மசோதாக்களை கிடப்பில் போட்டு வைத்திருக்கும் தமிழ்நாடு ஆளுநர், சிறப்புத் திட்டங்களுக்கானச் சட்டம் என்ற பெயரில், கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு ஆதரவான, நீர்நிலைகளை அழிக்கும், விவசாய நிலங்களை கபளீகரம் செய்யும் தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புத் திட்டங்களுக்கான) சட்டம் 2023க்கு மட்டும் வேகவேகமாக ஒப்புதல் அளித்துள்ளார்.

ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகள், நீரோடைகள், வாய்க்கால்கள் அமைந்துள்ள 100 ஹெக்டேருக்கு (சுமார் 250 ஏக்கர்) குறைவில்லாத நிலங்களை, சிறப்புத் திட்டங்களுக்கு என்ற பெயரில், பல்வேறு தேவைகளுக்கும் வழங்கலாம். அதாவது, இந்த சட்டத்தின்படி, 100 ஹெக்டேருக்கும் குறையாத ஒரு இடத்தில் நீர்நிலை, ஓடை, வாய்க்கால் இருந்தாலும், அந்த இடத்தில் உள்கட்டமைப்பு, வணிகம், தொழில்துறை, வேளாண் சார்ந்த திட்டத்தை ஒரு நிறுவனம் செயல்படுத்த விரும்பினால், அத்திட்டத்துக்கு சிறப்புத் திட்ட அனுமதி கோரி அரசிடம் விண்ணப்பிக்கலாம்; சிற்சில சம்பிரதாய நடைமுறைகளுக்குப் பிறகு நிபந்தனைகளுடன், தனியார் நிலங்களை ஒட்டியுள்ள / திட்டப் பகுதிக்குள் அமைந்துள்ள ஏரி, குளங்கள், ஓடைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்.

### அப்பட்டமான கார்ப்பரேட் ஆதரவு திட்டம்

இந்த சட்டத்தின் விதிகள், விளக்கங்கள் பின்வருமாறு உள்ளன:

1)"சிறப்பு திட்டம்" எனப்படுவது உள்கட்டமைப்பு, தொழில்துறை, வணிகம் அல்லது விவசாயத் திட்டம் என எவர் ஒருவரும் செயல்படுத்த விரும்பும் நூறு ஹெக்டேருக்கு (சுமார் 250 ஏக்கருக்கு) குறையாத நிலம் தேவைப்படும் திட்டம் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட எந்தவொரு திட்டமும் "சிறப்பு திட்டம்" ஆகும்.

2) "திட்ட நிலம்" என்பது ஒரு திட்டத்திற்கு தேவையான ஒட்டுமொத்த நிலங்கள், அதாவது, திட்டத்தை முன்மொழிபவருக்கு சொந்தமான நிலம் மட்டுமல்லாமல், திட்டப்பகுதிக்குள் ஆங்காங்கே உள்ளே அரசு நிலங்கள் அல்லது அரைஅரசு சார்ந்த நிறுவன நிலங்களும் உள்ளடங்கும்.

3)"நிபுணர் குழு" என்பது திட்ட முன்மொழிவின் மீது பொது விசாரணை நடத்தும் அமைப்பு மட்டுமல்லாமல் இத் திட்டப் பகுதிக்கு சம்பந்தப்பட்ட நபர்களின் பார்வைகளையும் உள்ளடக்கி, திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு நில ஒருங்கிணைப்பு வரைவையும் தயாரிக்கும் அமைப்பாக திகழுமாம்!?

4) 'இத்தகைய நிலங்களை வாங்குவதில்/ கையகப்படுத்துவதில் சட்டரீதியான விதிமுறைகள், ஆட்சேபணைகள் எதுவும் இல்லை' என்றும் இச் சட்டம் சொல்கிறது.

இந்த சட்டமானது, கடந்த மூன்றாண்டுகளாக மத்திய பாஜக அரசால் பரிந்துரைக்கப்பட்டு வந்த சட்டமாகும். கார்ப்பரேட் பெரு நிறுவனங்களுக்கு நிலங்களைத் தாரைவார்க்க, தடையின்றி அன்னிய நிறுவன முதலீடுகளை பெற, இத்தகைய சட்டம் வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டில் பெரு நிறுவனங்கள், 'சுற்றுச் சூழலை அழிக்கக் கூடிய எந்தவொரு தொழிற்சாலையையும் தங்குதடையற்ற முறையில்

கொண்டு வரலாம்' என்ற முழுமையான ஒப்புதலை இந்தச் சட்டம் வழங்குகிறது.

பெரிய திட்டங்களுக்காக அரசு நிலங்களையும் ஒருங்கிணைக்கும் இந்தச் சட்டமானது, நீர்நிலைகள் மீதான அரசின் கட்டுப்பாட்டை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மாற்ற வழி வகுக்கும். நீர்நிலைகள் இருந்தாலும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு, சிறப்புத் திட்டங்கள் என்ற போர்வையில், பெரிய அளவிலான நிலத்தை வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளது. நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான தற்போதைய சட்டங்களை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலும் சட்டத்தின் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டத்தின்படி, 100 ஹெக்டேர் நிலம் தேவைப்படும் எந்தவொரு திட்ட நிறுவனமும், அந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான நீரியல் திட்டம் மற்றும் மேலாண்மைத் திட்டம் போன்ற விவரங்களுடன் அரசுக்கு விண்ணப் பத்தை சமர்ப்பிக்கலாம். அரசு ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்கும். இதனால், பொது நீர் நிலைகளின் நிர்வாகமும் தனியார் நிறுவனங்களின் பிடிக்குள் செல்லும். இறுதியில், நீர்நிலைகள் தனியார்மயமாக்க அனுமதிக்கப் படுகிறது. இந்தவகையில் மிகப்பெரிய ஆபத்து காத்திருக்கிறது.

### பாதிப்புகள் என்ன?

இந்த சட்டம் அமலானால், நீர்வரத்துகள், நீர்நிலைகள் மீது அமைக்கப்படும் பல்வேறு திட்டங்களால் இயற்கை , சுற்றுச்சூழல், உயிரினங்கள் மற்றும் சமூகத்திற்கு பெரும்பாதிப்பு ஏற்படும். நீர்நிலைகள் நிரந்தரமாக அழிக்கப் படுவதோடு, அப்பகுதி சார்ந்த விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடிப்பு போன்றவை சீரழியும். தொழிற்சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், வணிக வளாகங்கள் என எந்தவொரு திட்டத்தையும் கட்டுவதற்கு நீர்நிலை நிலங்களை வாங்கும் பெருமுதலாளிகள் அல்லது பெரு நிறுவனங்கள் விருப்பம்போல அங்குள்ள நீர்நிலைகளை சேதப்படுத்திவிட்டு அந்த நிலங்களையும் கூட கட்டுமானங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளும்.

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நடப்புச் சட்டங்கள் எல்லாம் பொருத்தப்பாட்டை இழக்கும். உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரமும் பறிக்கப்படும். கிராமப்புற பகுதியில், எந்தவொரு திட்டம் / ஆலைகள் உள்ளாட்சி மன்ற அனுமதி இல்லாமலேயே நுழையும்; ஆதிக்கம் செலுத்தும்.

### தமிழ்நாடு அரசாங்கம் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்!

தொழில் வளர்ச்சி என்ற பெயரால், கார்ப்பரேட் பெருமுதலாளிகளின் நலன்களுக்காக, ஆறுகள், ஏரிகள், குளங்கள், ஓடைகள், இயற்கை, சுற்றுச்சூழல் என எல்லாவற்றையும் இழக்கலாம் என்ற மனப்பான்மையில் திமுக அரசாங்கம் இருப்பதாக தெரிகிறது.

மத்திய அரசின் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் உள்ள 1,06,957 நீர்நிலைகளில் 8,366 நீர்நிலைகள் சட்டவிரோதமான ஆக்கிரமிப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றொரு ஆய்வின்படி, ஏற்கனவே பட்டியலிடப்பட்ட சுமார் 65,000 நீர்நிலைகள் இருந்த தமிழ்நாட்டில் தற்போது சுமார் 30,000 நீர்நிலைகள் தான் இருக்கின்றன; அவைகளும் ஆவணங்களில் உள்ள பரப்பளவுகளை இழந்துள்ளன. தமிழகத்தின் நீர்நிலைகள் நிலைமை இப்படி இருக்கும்போது, இந்தச் சட்டம் அமலுக்கு வந்தால் நிலைமை படுமோசமாகும்.

இப்படி காணாமல் போன நீர்நிலைகள் மீது, தொழிற்சாலைகள், கல்லூரிகள், அடுக்குமாடி குடியிருப்புகள் , பெரும் வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற வற்றைக் கட்டியதால் நீர்நிலைகள், நீராதாரங்கள் மொத்தமாக ஒழிக்கப்பட்டு விட்டன. நீரோடைகள், வடிகால் கட்டமைப்புகள் அழிக்கப்பட்டதால், காலநிலை மாற்றத்தால் உருவாகும் பெருமழை மற்றும் பெரு வெள்ளங்களால் மாநகரங்கள் மிதக்கும் நிலைக்குச் சென்று விட்டன. இதனால், மாநகர மக்களின் வாழ்க்கை தொடர் பாதிப்புகளை சந்தித்து வருகிறது.

வெளிநாட்டு, உள்நாட்டு கார்ப்பரேட் பெருநிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் ஆதரவு உள்கட்டுமான வசதிகளுக்காக, தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலை அழித்து, விவசாயிகள் மக்கள் வாழ்வாதரங்கள் சூறையாடப்படுவதை நாம் அனுமதிக்க கூடாது.

இது தமிழ்நாட்டின் நீராதாரம், விவசாயம் மற்றும் வாழ்வாதாரம் சார்ந்த பிரச்சினையாகும். கார்ப்பரேட் திட்டங்களுக்காக, சுற்றுச்சூழல் விதிகளை தளர்த்தும், தமிழ்நாட்டின் நீர் நிலைகளைத் தாரைவார்க்கும் தமிழ்நாடு அரசாங்கத்தின், தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்களுக்கான) சட்டம் 2023 உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும். ❑

# பகத்சிங், அம்பேத்கார் கனவு கண்ட இந்தியாவைக் கட்டி எழுப்ப உறுதியேற்ற அகில இந்திய மாணவர் கழக 10 வது தேசிய மாநாடு!

அகில இந்திய மாணவர் கழகத்தின் 10 வது தேசிய மாநாடு கொல்கத்தா நகரில் 2023 ஆகஸ்ட் 9 முதல் 11 வரை நடைபெற்றது. மாநாட்டு அரங்கம் சந்திரசேகர்-பிரசந்தா பால் நினைவாக வும் மாநாட்டு மேடை ரோகித் வெமுலா - பயல் தட்வி மன்ஞ் நினைவாகவும் பெயர் சூட்டப் பட்டிருந்தது. மாநாடு "இளைய இந்தியா கல்வியையும் கவுரவமான வேலையையும் கோருகிறது, வெறுப்பு கும்பலை அல்ல" என்பதையும் "பகத் சிங் அம்பேத்கர் கனவு கண்ட இந்தியாவை கட்டி எழுப்புவோம்" என்பதையும் முழக்கமாக கொண்டிருந்தது.

மாநாட்டின் பொது அமர்வில் இகக(மாலெ) மேற்குவங்க மாநிலச் செயலாளர் தோழர் அபிஜித் மஜூம்தார், சந்திப் சவுரவ், சுசேதா டே மற்றும் ஜாதவ்பூர் பல்கலைக் கழக பேராசிரியர் மானஸ் கோஷ் ஆகியோர் உரையாற்றினர்.

மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியில் அனைத் திந்திய மாணவர் பெருமன்ற (AISF) தேசிய தலைவர் சுபம் பானர்ஜி உரையாற்றினார். அவர் மக்கள் விரோத, மாணவர் விரோத மோடி-ஷா ஆட்சிக்கு எதிராக போராட இடதுசாரி மாணவர் இயக்கங்கள் ஒன்றுபட வேண்டும் என வேண்டு கோள் விடுத்தார். இந்திய மாணவர் சங்க (SFI) தேசிய துணைத் தலைவர் பிரதிகுர் ரஹ்மான் தனது உரையில் மோடி-ஷா ஆட்சி இந்தி-இந்து-இந்துஸ்தான் என்பதை அமல்படுத்தி இந்தியா வின் ஒற்றுமையை, பன்மைத்துவத்தை, வேற்றுமையை அழித்து வருவதாக கூறினார்.

கல்வியாளர் குமார்ராணா மற்றும் அனைத்து வங்க மாணவர் அமைப்பின் நிறுவனர்களில் ஒருவருமான நில்கந்த் ஆச்சார்யா, பிற இடதுசாரி மாணவர் அமைப்புகள்- பிஎஸ்யு பொதுச் செயலாளர் நோபவுல் சைபுல்லா மற்றும் ஜனநாயக மாணவர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மணிசங்கர் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் தனது உரையில் "அய்சா தனது வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கும்போது, வளாக ஜனநாயகத்துக் காகவும் சிவில் உரிமைகளுக்காகவும் போராடிய மாணவர் செயல்பாட்டாளர்கள் உமர் காலித், குல்ஃபிஷா பாத்திமா போன்றோர் பொய்யான வழக்குகளில் சிறையில் வாடுகின்றனர். பீமா கோரேகான் போலவே குடியுரிமை திருத்தச் சட்ட எதிர்ப்பு போராட்டங்களையும் குற்றமயமாக்கும் சதி என்பது அம்பேத்கரின் இந்தியாவை அழித்தொழிக்கும் மிகப்பெரிய திட்டத்தின் பகுதியாகும். இஸ்லாமியர்களுக்கும் இதர ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கும் எதிராக வெறுப்பு அரசியலை நடத்தும் கும்பலாக இளைய இந்தியாவை எப்படி இந்த அரசாங்கம் மாற்றுகிறது என்பதை அம்பலப்படுத்த வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு மாணவர் சமூகத்திற்கு இருக்கிறது. ஆகவே, காலத்தின் தேவைக்கு எழுந்து நின்று இளைய இந்தியா வெறுப்பு அரசியலுக்கு பயன்படுத்தப்படுவதை அய்சா தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், கூடவே பாபா சாஹிப் அம்பேத்கரும் பகத்சிங்கும் கனவு கண்ட இந்தியாவை கட்டி எழுப்ப ஒரு வலுவான மாணவர் இயக்கத்தை கட்டி எழுப்ப வேண்டும்" என்றார்.

புரட்சிகர இளைஞர் கழகத்தின் நீரஜ் குமார், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தோழர் இந்திராணி தத்தா, தெற்காசிய ஒருமைப்பாட்டு குழுவின் கல்பனா வில்சன் ஆகியோர் மாநாட்டில் கருத்துரை வழங்கினர்.

மாநாட்டின் இறுதி நாளில் இன்றைய சூழலும் நமது கடமையும் பற்றிய அறிக்கை யையும் சில திருத்தங்களுடன் அமைப்புச் சட்டத்தையும் மாநாடு ஏற்றுக்கொண்டது. மாநாடு பாலியல் கூருணர்வு கொள்கை அறிக்கையையும் ஏற்றுக்கொண்டது.

மாநாட்டில் 171 பேர் கொண்ட தேசிய கவுன்சிலும் 65 பேர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. 15 பேர் கொண்ட நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது. நிலாசிஸ்போஸ் அகில இந்திய தலைவராகவும் பிரசன்ஜித் குமார் பொதுச் செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாட்டில் இருந்து சேலம் தோழர் சுந்தர்ராஜன் தேசிய செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ❑

## தேசிய தலித் உச்சி மாநாடு 2023

*தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் ஆகஸ்ட் 26, 27 தேதிகளில் தேசிய தலித் உச்சி மாநாடு நடைபெற்றது. முனைவர் ராஜசேகர் உந்துரு(இஆப) அரசியல் நோக்க உரை நிகழ்த்தி தலித்களுக்கான வேலைத்திட்ட நகல் விவாத குறிப்பை முன் வைத்தார்.*

*24 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆட்சிப் பரப்புகளில் இருந்து 87 அமைப்புகள் கலந்து கொண்டன. 37 பெண்கள் உள்பட 322 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பல்கலைக்கழக மான்ய குழுவின் மேனாள் தலைவரும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியருமான சுக் தேவ் தோரட்ட நிறைவுரையாற்றினார். சாதிய பிளவுகளை ஏற்றத்தாழ்வுகளை களைவதற்கு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் மக்கள் மத்தியில் சாதி மற்றும் தீண்டாமை பற்றிய கூர் உணர்வு விழிப்பு ஏற்படுத்த வேண்டும் என்றும் உச்சி மாநாடு தீர்மானித்தது. அனைத்திந்திய விவசாய, கிராமப்புற தொழிலாளர் சங்கம் இந்த மாநாட்டை நடத்திய அமைப்புகளுள் ஒன்றாகும். அயர்லாவின் தேசியத் தலைவரும் சிபிஐ(எம்எல்) பீகார் சட்டமன்ற உறுப்பினருமான சத்தியதியோ ராம், துணைத் தலைவரும் சிபிஐ(எம்எல்) பீகார் சட்டமன்ற உறுப்பினருமான மனோஜ் மன்சில், துணைத் தலைவர் பாலசுந்தரம், செயலாளர் திரேந்திரஜா, சிபிஐ(எம்எல்) மத்தியக்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், கேரள அமைச்சர் ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் சாந்தகுமாரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய செயற்குழு உறுப்பினர் அஜித் பாஷா மற்றும் தமிழ்நாட்டில் இருந்து தீண்டாமை ஒழிப்பு முன்னணி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், தமிழர் உரிமை மீட்புக் களம் உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.*

### ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் மாநில மாநாடு

## நவம்பர் 26 ஆளுநர் மாளிகை முற்றுகைப் போர் அறிவிப்பு

*திருச்சியில், ஆகஸ்டு 29ல் ஐக்கிய விவசாயிகள் முன்னணி (எஸ்கேஎம்) மாநில மாநாடு தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான செயற்பாட்டாளர்கள் மற்றும் விவசாயிகள் பங்கெடுத்துக் கொண்டனர்.*

*எஸ்கேஎம் தேசிய ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தோழர்கள் ஹன்னன் மொல்லா மற்றும் வெங்கய்யா சிறப்புரை ஆற்றினர். மேலும், ஏஐகேஎம் அகில இந்திய விவசாயிகள் மகாசபை மாநில பொதுசெயலாளர் சந்திரமோகன் உள்ளிட்ட ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாநில செயற்பாட்டு குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் உரையாற்றினார்கள்.*

*தில்லியில் துவங்கிய விவசாயிகளின் முதல் கட்டப் போராட்டம் இப்போது நாடு முழுவதும் விரிவடைகிறது. இரண்டாம் கட்ட போராட்டமானது, விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு துரோகம் இழைத்த, கார்ப்பரேட் காவிப் பாசிச மோடி அரசை, 2024 பொது தேர்தலில் வீழ்த்தும் அரசியல் கடமையை மேற்கொள்கிறது.*

*"டில்லி விவசாயிகளின் போராட்டத்தில் மோடி அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததைக் கண்டித்தும் உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும் நாடுமுழுவதும் வரும் நவம்பர் 26, 27, 28 தேதிகளில், மாநில தலைநகரங்களில் ஆளுநர் அலுவலகங்கள் முற்றுகை இடப்படும்" என்ற முடிவின் அடிப்படையில், "சென்னை ஆளுநர் மாளிகையை ஆயிரக்கணக்கான விவசாயிகளை அணிதிரட்டி முற்றுகை இடுவது" என மாநில மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.*


மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர் !

மாதம்
இருமுறை

தனி இதழ் ரூ.10

நன்கொடை தாரீர் !!

ஆண்டுச் சந்தா ரூ.200

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.09.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி










Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh